# காரிகை

மகளிர் தின சிறப்பிதழ் - 2010



மமா/வ/ரிலாமுல்ல தமிழ் மகா வித்தியாலயம்

கந்தப்பளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதி கலைக்கூடம்

2010 பெப்ரவரி 14 முதல்

# இராகலை நகரில்

பன்சல வீதி, இராகலை

The New World Institute உடன் இணைந்து

| | |
|---|---|
| தமிழ் | **S. மோகன்**<br>சட்டமானி (விசேட) பட்டம், DIE (Col) DAPS (UK)<br>சட்டத்தரணி (பயிலுனர்) |
| அரசறிவியல் | **K. புனிதா**<br>கலைமாணி (அரசறிவியல் சிறப்பு) பட்டம் |
| புவியியல் | **N. விஜேந்திரா**<br>BA (Read), Nati -Dip-in Teach (Merit)<br>Diploma in edu. mgt. |

சட்டக் கல்லூரி
நுழைவுப்பரீட்சை
வகுப்புக்கள்
ஆரம்பிக்கப்பட்டுள்ளன

SRI LAKAN
LAW COLLEGE
ENTRANCE
CLASSESS



# BHARATHY INSTITUTE

Ragala Bazaar, Kovil Building Pansala Road, Halgranoya

Tel: 075 5654216 / 072 4007080


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரிகை

# KARIGAI

## மகளிர் தின சிறப்பிதழ் -2010

இதழ் - 01, மார்ச் - 08 - 2010

மகளிர் மன்றம்
மமா/வ/ரிலாமுல்ல தமிழ் மகா வித்தியாலயம்
கந்தப்பளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "அன்னையின் அருமை"

"என்னை ஈன்றெடுத்த
அன்னையவள்
அருமைதனை
அறிந்து கொண்டேன்
எப்போது....?
என் மகளை நான்
சுமந்து,
ஈன்றபோது"

மகளிர் தினத்தில் மாத்திரமல்லாது
நிரந்தரமான
பெண் விடுதலை,
பெண் சுதந்திரம்
என்பவற்றிற்காய் நாம் பாடுபடவேண்டும்

இவ்விழா, இவ்விதம்
சிறப்புற வாழ்த்துகின்றேன்
இனிய மகளிர் தின
நல்வாழ்த்துக்கள்

**திருமதி துவாரந்தி நாகராஜா**
உரிமையாளர்
அம்ருதா அச்சகம், இராகலை

Amrutha
Advertising & Printing

Typesettings, Printing, Designing Logos, Leaflet, Image Editing, Image Retouching, Wedding Albums, Wedding Cards, Shop Display Boards, Wedding Photography

INDIAN WEDDING CARDS & ALBUM AVAILABLE



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சஞ்சிகை

# காரிகை

Karigai

மகளிர் தின சிறப்பிதழ் -2010


இதழ் - 01

மார்ச் - 08 - 2010


### வெளியீடு

மகளிர் மன்றம்
மமா/வ/ரிலாமுல்ல த.ம.வி
கந்தப்பளை

### காப்பாளர்

திரு.கே. பாலகிருஸ்ணன்

### தலைவர்

திருமதி. கலாதேவி சத்தியமூர்த்தி

### செயலாளர்

திருமதி. மணிமேகலை லோகேஸ்வரன்

### பொருளாளர்

திரு. பொன்னுசாமி திலகேஸ்வரி

### செயற்குழு உறுப்பினர்கள்

திருமதி. யோகினி சுரேஸ்குமார்
செல்வி. அ. நிர்மலா ஜோதி
செல்வி. க. ஜோய்பிரபா
திருமதி. கோகிலா சந்திரகுமார்
செல்வி. ச. தேவிகா
செல்வி. த. அருள்மொழி
செல்வி. த. வினோதினி
திருமதி. ச. மகேஸ்வரன்
திருமதி. சிரோமி கீர்த்திகா

### இதழாசிரியர்

திருமதி. லலிதா நாகராஜன்

### நூலாக்கக்குழு

திருமதி. கலாதேவி சத்தியமூர்த்தி
திருமதி. மணிமேகலை லோகேஸ்வரன்
செல்வி. பொ. திலகேஸ்வரி

### அட்டைப்படம்

திரு. அருளானந்தன்

### அச்சுப்பதிப்பு

**அம்ருதா அச்சகம்**
இல-39, ஸ்டபொட் வீதி,
இராகலை, ஹல்கிரனோயா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகளிர் தின நல்வாழ்த்துக்கள்

# VIJAYA TEXTILES

விஜயா டெக்ஸ்டைல்ஸ் විජයා ටෙක්ස්ටයිල්ස්



உங்கள் திருமண
வைபவங்கள் முதல்
அணைத்து விதமான
வைபங்களிற்கும்
நாடவேண்டிய ஒரே இடம்

**VIJAYA TEXTILES**


No 63, Ragala Bazaar,
Halgranoya
052 2265220
052 2263500

மகளிர் தின நல்வாழ்த்துக்கள்

# NEW CHANDRAS

நிவ் சந்திராஸ் නිව් චන්ද්‍රාස්

**General Merchants and Commission Agents & Transporters**



Highforest No-03, Bingantalawa Street, Kandapola
052 2286161





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை கீதம்

தெள்ளிய நீராய் தெளிந்த நல்லறிவை
அள்ளிச் சொரியும் அன்னை நீ வாழ்க!
தேயிலை மணக்கும் தேசத்திலே உயர்
மலைகளின் நடுவே மங்களாய்!

(தெள்ளிய)

நாடு செழித்திடும் நல் வழியும் எங்கும்
நீதி தவறா நெறி முறையும்
வானம அளக்கும் வல்லமையும் கடல்
ஆழம் அறியும் அறிவினையும்

(தெள்ளிய)

ஓடும் நதியை ஓரிடம் சேர்த்து
ஊரில் பசுமை ஊற்றி வளர்க்க
மானுடம் வெல்லும் மகியைம் கற்று
மனிதர் மகிழும் மனம் கொள்ள

(தெள்ளிய)

செந்தமிழோடு சீரிய கணனி
சிந்திப் பெருகிடும் சுவை கண்டே
உலகம் உவர்க்கும் உயர் நடையாம் சீர்
ஒழுக்கம் தனை நாம் உவந்தேற்க

(தெள்ளிய)

தந்தையும் தாயும் தாயும் தரணியி லாசான்
சான்றோர் புகழும் சிறந்திடவே
ரிலாமுல்ல தமிழ் வித்தியாலயம் புகழ்
வான் வரை நின்று வளர்ந்திடவே

(தெள்ளிய)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகளிர் தின நல்வாழ்த்துக்கள்


SARITHA TRADERS



No. 3, Highforest Bazaar, Kandapola
052 5670365, 077 2750598, 0787114005

மகளிர் தின நல்வாழ்த்துக்கள்

LUXMI TRADERS



No. 3, Highforest Bazaar, Kandapola
052 5670236



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் தாய் வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழிய வே!

வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வன் மொழி வாழிய வே!

ஏழ்கடல் வைப்பினுந் தன் மனம் வீசி
இசை கொண்டு வாழியவே !

எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ் மொழி
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்கத் தமிழ் மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!

தொல்லை வினை தரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ் நாடே!


வாழ்க தமிழ் மொழி வாழ்க தமிழ் மொழி
வாழ்க தமிழ் மொழியே!

வானம் அளர்ந்த அனைத்தும் அறிந்திடும்
வளர் மொழி வாழியவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகளிர் தின நல்வாழ்த்துக்கள்



# GANESHA JEWELERY

*Sellers of high class 22ct Gold Jewellery*

**No. 118, Ragala Bazaar, Halgranoya**
**Phone: 052 2265617**



*மகளிர் தின சிறப்பு மலர் என்றும் சிறக்க வாழ்த்துகின்றோம்*

**Pro. Mrs. S. Vijeyaletchumy's**

# ஸ்ரீ ஜெட்ரீஸ் டிரேடர்ஸ்

## SRI JETTYAS TRADERS



*ஹைபொரஸ்டில் பிரசித்தி பெற்ற மொத்த சில்லரை பலசரக்கு வியாபார நிலையம்*

**No. 03, Highforest Bazaar, Kandapola**
**052 3526438**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ZONAL DIRECTOR'S MESSAGE

It's my pleasure to have this message on "Women's Day" Souvenir publish by CP/W/Rillamulla T.M.V. I am very glad to congratulate the organizers of this publication. I can say confidently that Rillamulla T.M.V as done a great service. to the people who contribute there share to society. It's another magnificent attempt of respecting the women by publishing this souvenir.

The women take the main part in a country development. They work very hard for the development of the society, country and the world. They work in the varieties of fields. They have done a great contribution for the physical and human resource development. It's our responsibility to honour them.

As well as they take the major role in the education field today. We can see a huge number of the lady teachers and the lady principals who sacrifice their lives to produce educated citizens. They take the great responsibilities in their families and in their working fields. So I wish them all the success.

**M.W. WIJERATNE**
Zonal Director of Education
Zonal Education office
Walapane





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகளிர் தின நல்வாழ்த்துக்கள்

# THE TOPSI



**No 20, Bus Stand, Ragala Bazaar,**
**Halgranoya**
**052 2265328**

மகளிர் தின நல்வாழ்த்துக்கள்

තරංගා ස්ටෝර්ස්

# THARANGA STORES

**தரங்கா ஸ்டோர்ஸ்**



**No. 3, Highforest Bazaar, Kandapola**
**052 5670236**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதவிக் கல்வி பணிப்பாளரின் எண்ணக்கருவிலிருந்து...



**வசதிகளை**

**எதிர்நோக்கும்**

**ஆவேசப்பார்வை**

வறுமையிலும் இன்பத்தைக்
காணத் துடிக்கும் ஆத்மீகப்பார்வை
ஒதுக்கப்பட்ட பிரதேசத்திலும்
உயர்வைத்தேடும் கல்விப்பார்வை!

ரிலாமுல்ல தமிழ் மகா
வித்தியாலயத்தின்
அடையாளச்சின்னங்கள் இவை.
சரிபாதி பெண்ணினத்தைக்கொண்ட
ஆயிரத்திற்கும் மேற்பட்ட
மாணவர்கள் கடந்த தசாப்தங்களில்
இக்கல்லூரி எதிர்நோக்கிய
சகல சமூக-பொருளாதார
பிரச்சனைகளையும் உடைத்தெறிந்து
- வலப்பனை கல்வி வலயத்திற்குள்
வருடாந்தம் பல்கலைக்கழகத்திற்கு
மாணவர்களை உள்வாங்கும்
அளவிற்கு இதன் செயற்பாட்டிற்கு
அர்ப்பணம் புரிந்த - புரிகின்ற
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
மதிக்கப்படவேண்டியவர்கள்

இத்தகைய பின்புலத்தில் காரிகை
என்ற நூல் "பெண்மைபோற்றும்" -
தனது முதல் கன்னிப்பயணத்தில்
காலடி எடுத்துவைப்பது -
இப்பாடசாலையின் மகிமைக்கு
மற்றுமோர் மகுடமாகும்.

பாரதி கண்ட புதுமைப்பெண்
மற்றுமோர் புதிய பரிணாம பாதையில்
ஊடுருவி சமூக அவலங்களை
உடைந்து பாடசாலையை
தளமாக கொண்டு பிரவேசிப்பது
மலையகத்தின் எழுச்சியில்
மற்றுமோர் அத்தியாயமாகும்.

வளமான வாழ்வியல் அம்சங்களில்
"பெண்ணின்றி பெறுமையில்லை"
என்ற உண்மையை உணர்த்தும்
இந்நூலின் சொந்தக்காரர்கள்
அணைவருக்கும் வாழ்த்துக்கள்

**இதழ் தொடர எனது நல்லாசிகள் என்றென்றும்.**

**எஸ். சுப்பரமணியம்**
உதவிக்கல்விப் பணிப்பாளர்
(தமிழ் பிரிவு)
வலப்பனை கல்விக்காரியாலயம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# I.C.T

The New World I.C.T
Institute of computer technology

**The New world Institute of Computer Technology**



No-01, 02, Kovil Building, Pansa Road, Ragala, Halgranoya
Hotline: 0722478387, Phone: 052 2265261
emil: ictnewworld@yahoo.com

# SASI HOTEL



Highforest No-03 Bazaar
Kandapola

# MULTY CORNER

**Dealers in textiles**
**& Fancy Goods**
**Specialist in wedding sarees,**
**Bombay shalwars,**
**School Items, Gift Items &**
**Baby wears**

No-03 Highforest Bazaar
Kandapola
077 6323027
052 7910306





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபரின் வாழ்த்துரை



**காரிகை**
**புதிய பரிமானங்களுடன்**
**மலரும்**
**மகளிர் தின சிறப்பிதழ்**



மமா/வ/ரிலாமுல்ல தமிழ் மகா வித்தியாலய ஆசிரிய பெருந்தகைகளின் அர்ப்பண சிந்தனையுடன் வெள்ளி விழாவினை அண்மிக்கும் காலப்பகுதியில் சர்வதேச மகளிர் தினத்தையொட்டி வெளிவரும் இந்நூல் கண்டு அகம் மகிழ்கின்றேன்.

அறிவைப் பரப்பும் மிக நுட்பமான சாதனங்கள் பல்கிப்பெருகியுள்ள இந் நாட்களில் இலக்கியமொன்று தடம் பதிப்பது மிகவும் வரவேற்கதக்கதொன்றாகும். சமூக மாற்றங்கள், சமகால அரசியல் கல்விச்சிந்தனைகள், கலை துணுக்குகள் வரலாற்று பாடங்கள் சார்ந்த ஆக்கங்கள் கல்வி சார் துறையினால் எழுதப்பெற்ற இவ்விதழ் பயன் நிறைந்த பதிப்பாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.


மாணவர் நலனுக்காகவும், சமூக மேம்பாட்டிற்காகவும் புதிய பரிமானங்களுடன் மலரும் இவ்விதழ் தொடர்ந்து வெளிவரவும் பயன்தரவும் வாழ்த்துகின்றேன் அத்தோடு இந்நூலாக்க குழுவினருக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

**கே. பாலகிருஸ்ணன்**
அதிபர்
மமா/வ/ரிலாமுல்ல த. ம. வி
கந்தப்பளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகளிர் தின சிறப்பிதழ் என்றும் சிறப்புற நல்வாழ்த்துக்கள்




# MATHU TRADERS

No 3, Highforest Bazaar, Kandapola

மகளிர் தின சிறப்பு மலர் என்றும் சிறக்க வாழ்த்துகின்றோம்

# புனித அன்னால் கல்வியகம்




பிரம்லி எஸ்டேட், கந்தப்பளை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதி அதிபரின் வாழ்த்துரை



சமுதாயத்தின் தாக்கங்களையும், வாழ்வியல் தத்துவங்களையும் உளரீதியாக உணர்ச்சியின் வெளிப்பாடாக கொணர்பவையே கலைகளாகும். எனவே சமுதாய பண்புகளை ஒன்று சேர்த்து சிறந்த ஒரு சமுதாயத்தை உருவாக்க உருதுணையாக அமைவன கலைகளாகும். ஒவ்வொரு மானிடனும் தன் வாழ்நாளில் முழுமையான மனிதனாக வாழ வழி அமைப்பதில் பெரும் பங்கு கலைக்கே. அந்த வகையில் எமது பாடசாலை மற்றுமொரு நூலினை பிரசவித்து கலை மீதான ஈடுபாட்டை வெளிபடுத்தி நிற்கின்றது.



மகளிர் தினத்தை முன்னிட்டு மணம் பரப்பும் இவ்விதழ் தொடர்ந்தும் பலவாய் மலர்ந்து மணம் பரப்பிட வாழ்த்துக்களுடன் இந் நற்பணி தொடர உழைத்த அனைவருக்கும் இதயபூர்வமான நன்றியினையும் தொரிவித்துக்கொள்கின்றேன்.

**எஸ். புகழேந்திரன்**
பிரதி அதிபர்
மமா/வ/ரிலாமுல்ல த. ம. வி
கந்தப்பளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மகளிர் தின நல்வாழ்த்துக்கள்



KANDASAMY KEDEESWARAN (TEACHER)
CP/HK/Princess Tamil Vidyalayam
Gonapitiya, Kandapola

மகளிர் தின நல்வாழ்த்துக்கள்

EMS VIDEO VISION



DIALOG RELOAD - SUNTEL RELOAD -
ALL PREPAID CARDS
DVD, VCD, CD, AUDIO CASSETS



No. 3, Highforest Bazaar, Kandapola
052 3532112, 0775796955




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உப அதிபரின் ஆசிச்செய்தி



மமா/நு/ரிலாமுல்ல தமிழ் மகா வித்தியாலயத்தின் ஆசிரியர்களும், மாணவர்களும் இணைந்து வெளியிடும் இந்நூல் பெண்களின் விடுதலைக்கான ஆக்கங்களாக அமைந்திருப்பதுடன் ஆசிச்செய்தி எழுதுவதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

மகளிர் தினம் மார்ச் மாதம் 8ஆம் திகதி உலகெங்கும் கொண்டாடப்படுகிறது. பெண்களின். உரிமைகள் பாதுகாக்கப்படல் வேண்டும் என்ற சுலோகம் ஒவ்வொரு ஆண்டும் மிக அழுத்தமாக இந்த தினத்தில் முன்வைக்கப்படுகிறது.



இவ்வருடம் இத்தினத்திற்காக எமது பாடசாலையில் சிறந்த மகளிர் தின விழா ஒன்றினையும் இம்மலர் வெளியிட்டினையும் ஒரே மேடையில் நிகழ்த்துவது சிறந்த சாதனையாகும். இச்சாதனைக்கு பின்னால் இயங்கிய அனைவருக்கும் பாராட்டு தெரிவிப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைவதுடன் எதிர் காலத்திலும் இத்தகைய விழாக்கள் தொடர்ந்து வருடா வருடம் நடைபெற வாழ்த்துகிறேன்.

இக்கலைத்தாயின் பிரசவத்திற்கு உதவிய அனைவருக்கும் நன்றி

**திருமதி. கலாதேவி சத்தியமூர்த்தி**
உப அதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழாசிரியரின் எண்ணத்திலிருந்து...



மார்ச் 08ம் திகதியை சர்வதேச பெண்கள் தினமாக நினைவு கூறப்படுகின்றது. இத்தினத்தை பல்வேறு மட்டத்தை சார்ந்தவர்களும் அவரவர் அறிவு திறன் சிந்தனை என்ற நிலைகளில் இருந்து நினைவு கூறுகின்றனர்.

மேல்தட்டு வர்க்கத்தைச் சார்ந்தவர்கள் ஒன்று கூடி உண்டு கழித்து மகிழ்ந்து உலாவும் தினமாக்கியுள்ளனர் ஆனால் அதுவல்ல பெண்கள் தினம் இத்தினம் பெண்கள் மிதான ஒடுக்குமுறைகளுக்கு எதிரான தினம் சமூகத்தில் ஏவிவிடப்பட்டிருக்கும் சகலவிதமான கொடுமைகள் கொடுரங்களுக்கு எதிரான தினமாகவும் பெண்களின் விடுதலைக்குரிய தினமாகவும் நோக்கப்படுதல் வேண்டும்.

இதனை கருத்தில் கொண்டே நு/வ/ரிலாமுல்ல தமிழ் மாகா வித்தியாலய மகளிர் மன்றமானது ஒவ்வொரு வருடமும் கொண்டாடும் சர்வதேச பெண்கள் தினத்தை நிகழ்வுகளுக்குள் மட்டுப்படுத்திக் கொள்ளாமல் இத்தினத்திக்குரிய சிந்தனையை ஆவணப்படுத்திக்கொள்ளும் நடவடிக்கையை எண்ணி உலக சிதறல்களுக்கு ஒரு புதிய பிரசவத்தை இணைக்க எண்ணியது, அதன் விளைவே காரிகை: என்னும் பெயரோடு வெளிவரும் கனதியான ஒரு படைப்பாகும்.

காரிகை என்பது பெண்ணை முன்னிலைப்படுத்திக் கூறும் அமைப்பு உளரீதியான யாப்பை பின்பற்றி எழுதப்பட்ட செயல்பாட்டின் நூல் எனக் குறிப்பிடப்படுகின்றது. இச்சஞ்சிகையானது பெண்கள் மிதான ஒடுக்குமுறைகள் பற்றியும் அவற்றில் இருந்து பெண்கள் விடுதலை பெறுவது என்பதுவும் போகப் பொருளாக இருந்த நிலைமாறி இன்று சமூகத்தில் பல்வேறு மட்டங்களில் பெண்விடுதலை பற்றிய குரல்கள் மேலெலும்பி வெளிப்படுகின்றன ஆனால் அவை அமைப்பு ரிதியாகவும் திருப்தி தரக்கூடிய வகையிலும் நிகழவில்லை என்பது கருத்தில் கொள்ளப்பட வேண்டியதும் என்பதனை தெளிவுபடுத்துவதோடு அங்கு இலக்கியப் பணியை முன்னேடுக்க கூடிய பாடசாலை மாணவ மாணவிகளும் ஆசிரியர் ஆசிரியைகளையும் இணைத்துக் கொண்டும் மேலெலும்பும் ஒரு புதிய முயற்சியும் ஆகும்.

இன்று உலகமயமாக்கள் சூழலில் மேற்குலக நாடுகள், வளர்முக நாடுகளையும் சமூகத்தையும் கொள்ளையிட்டு சுரண்டி வருகின்றது இதில் பெண்கள் நாளாந்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு கொடுமைகளுக்கும் உள்ளாக்கப்பட்டுவருகின்றனர் பொருளாதார, அரசியல், பண்பாட்டுத் தாக்கங்களை பெண்களுக்கெதிரான அடக்குமுறைகளை காண முடிகின்றது ஆனால் அவற்றுக்கெதிரான சிந்தனை ஒருமைப்பாட்டோடு கூடிய அணித்திரட்டல்கள் இல்லை என்பதுவும் கவலைக்குறியதே.

இந்நிலைகளைக் கருத்திற்கொண்டு வெளியிட தீர்மானித்த காரிகை எனும் சஞ்சிகையின் பல்வேறு மட்ட அறிவு நிலைகளில் இருந்து எழுதப்பட்ட கவிதை, கட்டுரை, சிறுகதை என்பவற்றை சுமந்து வெளிவந்துள்ளது.

எமது இம்முயற்சி தொடர்பான முதலில் எமது அதிபர் அவர்களிடம் கதைத்தபோது மனமுவந்து அனுமதியளித்து ஆலோசனை வழங்கியுள்ளது எமது வெளியீட்டுக்கான முதற்கட்ட அங்கீகாரமாகும் அதற்காக அவருக்கு நன்றி பகிர்வதோடு ஏனைய ஆக்கங்களை தந்துதவிய படைப்பாளிகளுக்கும் அவற்றை திருத்தி தர உதவிய சகோதர ஆசான்களுக்கும் என்னோடு முயற்சியில் பங்கெடுத்துள்ள சக ஆசிரியர்களுக்கும் நன்றியை பகிர்வதோடு. இப்பணி பூரணத்துவம் செய்ய மனமுவந்து உதவிக்கரம் நீட்டிய விளம்பரதாரர்களுக்கும், இந்நூலை சிறப்பாக அச்சுப்பிரதி செய்த அம்ருதா அச்சக நிறுவனத்திற்கும் நன்றியை நூலாசிரியர் என்ற முறையில் பகர்வது எனது கடமை எனக் கருதுகின்றேன்.

இது ஒரு கன்னி முயற்சி என்பதனால் இப்பணி இத்தோடு நிறைவு பெறாமல் ஒவ்வொரு வருடமும் பெண்கள் மீதான ஒடுக்கு முறைகளுக்கெதிராக வெளிப்படும் இச்சஞ்சிகை தீப்பிழம்பாக வெளிவரவேண்டும் என்பது எனது அவா.

நன்றி

**திருமதி லலிதா நாகராஜன்**
மமா/வ/ரிலாமுல்ல தமிழ் மகா வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச மகளிர் தினம்

# ௩ மார்ச் 08

சர்வதேச பெண்கள் தினம் ஐக்கிய நாடுகள் சபையினால் 1975ம் ஆண்டு அங்கிகரிக்கப்பட்டது. இது மார்ச் மாதம் 8ம் திகதி கொண்டாடப்படுகின்றது. ரஸ்யாவின் கிளாரா ஜெட்கின் என்பவரே மிக முக்கியமானவர் இவரின் வேண்டுகோளின் பேரிலேயே இத்தினத்தை கொண்டாட உலக அங்கிகாரம் கிடைக்கப் பெற்றது.

ஒரு பெண் தனக்கு எதிரான அனைத்து அடக்கு முறைகளையும் எதிர்கொண்டு அதற்கு எதிராக குரல் கொடுப்பதன் மூலம் தனது உரிமைகளை பெற்றுக்கொள்வதே பெண்ணுரிமை எனக் கொள்ளப்படுகிறது.

ஒரு பெண் ஆணிடமிருந்து எந்த விதத்திலும் தாழ்த்தப்பட்டவள் அல்ல அவள் உடல் கூற்று பௌதீக விஞ்ஞான முறைப்படி தாய்மை அடையும் சக்தி ஒரு பெண்ணிடமே இருக்கின்றது. ஆண்டவன் படைப்பில் சில பிரத்தியேக உடல்வாகுப் பரிமாணங்கள் அவளிடம் காணப் படுகிறது. இது ஒரு பெண் ஆணிடமிருந்து எந்த விதத்திலும் தாழ்த்தப்பட்டவள் என்பதற்குறிய ஓர் அடையாளம் அல்ல, தவிர ஆணும், பெண்ணும் மனிதர்கள் தான். இருவருக்கும் உணர்வுகள் ஒன்றுதான் இங்கு வேறு எந்த வேறுபாடுகளும் கிடையாது. உரிமைகள் சுதந்திம் போன்ற விடயங்களில் பால் ரீதியாக இங்கு பாராபட்சம் காட்ட வேண்டிய அவசியம் எதுவும் இல்லை.

பெண் என்பவள் வீட்டில் துணிகள் துவைப்பதற்கும், சமைத்துப் போடுவதற்கும், பிள்ளை பெறுவதுமான ஓர் இயந்திரம் மட்டும் தானா? அவளுக்கு உணர்ச்சிகளே கிடையாதா? இந்த நிலை மாற வேண்டும் மாறுகின்றது முன்னர் எமது அம்மாவின் உலகம் அப்படிதான் ஆனால் எமது சாகோதரிகள் அப்படியல்ல படித்திருக் கின்றார்கள், வேலைக்குப் போகின்றார்கள், அவர்களின் பிரச்சனைகளை அவர்களே சமளிக்கின்றார்கள். இதற்கு காரணம் பெண்ணுரிமை பற்றிய விழிப்புணர்வு மட்டுமல்ல பெண்கள் தங்களைத் தாங்களே நிலை நிறுத்திக் கொள்ள எடுக்கும் முன்னேற்றகரமான முயற்சிகளுமே? ஏன் ஆண்கள் தோசை சுட்டால் தோசைக்கல்லை விட்டு வெளியே வராதா? என்று பெண்கள் கேட்பது புரிகின்றது.

பெண்கள் உரிமை பற்றி அதிகமாக பேசியவர்கள் ஆண் இலக்கியவாதிகளே எழுத்துலகில் இதற்கென பாரிய புரட்சிகள் முன்னேடுக்கப்பட்டு வருகின்றன ஆண்கள் அடிமை சாதியொழிப்பு வருமானப்பங்கிடு சுரண்டல்கள் போன்ற கம்யூனிச சிந்தனைகளுடன் பெண்ணுரிமை பற்றியும் சிறப்பாக பேசப்பட்டு வந்திருக்கின்றது. எமது மத்தியில் தோன்றிய பகுத்தறிவாளர் இயக்கங்கள் இந்த பெண் விடுதலைக்கு சிறப்பான ஓர் இடத்தை வழங்கி வந்திருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்றெண்ணியிருந்தவர் மாய்ந்து விட்டார் என்று மாகாகவி பாரதியார் பாடியதையோ தலைவாரி பூச்சூடி உன்னை பாடசாலைக்கு போவென்று சொன்னாள் உன் அன்னை என்று விழித்துப்பாடிய பாரதிதாசனையோ யாரும் எழிதில் மறந்துவிட முடியாது பெண்களின் முக்கியத்துவம் இப்போது அதிகமாக பேசப்பட்டு வருகின்றது.

ஓர் இனம் எப்படி தன்னாதிக்கத்தோடு உரிமைகளையும், சலுகைகளையும் பெற்று வாழ முடிகிறதோ, அப்படியே தான் பெண்ணும் அனைத்து உரிமைகளையும் இந்த பூமியில் பெற்று வாழ உரித்துடையவள் பெண்ணுகளுக்கெதிரான வன்முறைகள் நிறுத்தப்படல் வேண்டும். எந்தவொரு விடயத்திலும் சுதந்திரமாக முடிவெடுக்கும் நிலை பெண்களுக்கு இருக்க வேண்டும். பெண்கள் இந்த சமுதாயத்தில் இரண்டு கண்களாக போற்றப்படவேண்டியவர்கள். எனவே பெண்கள் தினத்தில் எங்கள் வீட்டில் உள்ள ஒவ்வொரு பெண்களின் உணர்வுகளையும் சீர்தூக்கி பார்க்க வேண்டியது முக்கியமான ஒரு கடமையாகும்.


**திருமதி. கலாதேவி சத்தியமூர்த்தி**
உப அதிபர்
நு/வ/ரிலாமுல்ல த. ம. வி







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21ஆம் நூற்றாண்டில்


பெண்ணே எழுந்திடு! - உன்
அடிமை பிடியிலிருந்தது போதும்
எழுந்திடு!
உன் கொடுமையை நிறுத்து
புறப்படு நீயும்
புதுயுகம் படைத்திடு
வேண்டாம் இனியும்
உன் வேதனைகள்
வேண்டாம்

மலைகளில் மலையேறிய
காலம் போதும்
இனியும் வேண்டாம்
மழலை எண்ணங்கள்
வேண்டாம் இனியும்
பொங்கிடு பேரலையாய்
போகட்டும்
உன் அவலங்கள்

படைத்திடு பெண்ணே
சாதனைகள் - இனியும் வேண்டாம்
சாக்கடையாகட்டும் - உன்
சஞ்சலங்கள்
வாடிய எண்ணங்கள்
வேண்டாம்
வளர்ந்திடு - நீயும்
தென்னையாய்

அடுப்பூதிய காலம்
போகட்டும் - இனியும் வேண்டாம்
அடிமை நிலை
மாறட்டும் - பெண்ணே!
அடிமையை நிறுத்து - பெண்ணே!
பெண்ணே

ஆண், பெண் நிலையை
பிளந்து
ஆணுக்கு நிகர் உணர்த்து
மாற்றிடு நீயும்!
உலகில் மர்மநிலைகளை
உணர்த்து!
மாறிடு பெண்ணே - நீயும் மாறிடு
கல்வியிலே
பெண்ணே ! - நீ கன்னி
பதவியிலே - நீ
பட்டதாரி
பாரினிலே - உன்னை
நம்பி
ஏங்குது சமுதாயமே!.



**திரு. கே. ரகுகுமார்**
ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணியம் ஒரு பன்முக பார்வை

ஒரு பண்பாட்டின் உன்னதங்கள் என கருதப்பட்டவைகள் அப்பண்பாட்டிற் தோன்றிய இலக்கியங்களில் கண்டுகொள்ள முடியும் குறிப்பாக காவிப்பாத்திரங்கள் மானிடர்களாக இருக்கும்பட்சத்தில் அக்காப்பியம் தரும் அழகியல் இரசனைக்கு அப்பால் மனித வாழ்வின் விழுமியங்கள், போதனைகள் மற்றும் இன்னோரான்ன அனைத்தும் அடிப்படையில் நூலாசிரியரின் இலட்சியங்களை வெளிப்படுத்துவதாகவும் அதே வேளை அக்கால மனிதரின் உளவியலான வாழ்க்கையை மறைமுகமாக கொண்டும் இருக்கும் என்ற எடுகோலின் அடிப்படையில் தொல்காப்பியம் தொட்டு இன்ற வரை இலக்கியங்கள் "பெண்ணியம்" பேசும் சில துளிகளை இலக்கியங்கள் சிலவற்றிலிருந்து மதிப்பிட இக்கட்டு முயல்கின்றது.

## தொல்காப்பியம்

கி.பி 3ஆம் நூற்றாண்டுவரை எழுந்த நூல்களாக தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்பன விளங்குகின்றன. அக்கால மக்கள் பண்பாட்டில் புவியியல் அமைப்புக்களும் இவ்வமைப்புக்ளுக்கேற்ப மக்களின் வாழ்க்கை முறைகளும் இன்றியமையாத நிலையை வகித்தன.

இக்காலப்பகுதியில் எழுந்த தமிழ் இலக்கியங்கள் அரசியல், சமூகம் மற்றும் வரலாறு என்ப பற்றி அறிவதற்கேற்ற பல விடயங்களை கொண்டுள்ளன. அவ்வகையில் பெண்கள் பற்றியும் அவர்களுக்குறிய இடம் பற்றியும் கூறப்படும் கருத்துக்கள் முக்கியத்துவம் உடையன.

தொல்காப்பியத்தில் பெண்கள் பற்றி கூறும் கருத்துக்கள் முக்கியமானவை. சங்க இலக்கியங்கள் வரிசையில் தொல்காப்பியம் பெண்கள் பற்றிக் கூறும் போது பெண்ணின் இலக்கணங்களை வகுத்து கூறுவதில் இன்னுால் சிறப்புப் பெறுகின்றது. தொல்காப்பியம் பெண்ணுக்குறிய இலக்கணத்தை, பண்பை பின்வருமாறு வரையறுத்து சொல்கின்றார் "அச்சமும் நாணும் மானுடம் முந்துதல் நிச்சயம் பெண்ணுக்குரிய" என்பர்

இங்கு அச்சம், மடம், நாணம் எனறு சொல்லப்படுகின்ற கற்பு ஒழுக்கம் பொறுமை ஆகியன பெண்களிடத்தில் எப்போதும் இருக்க வேண்டிய நற்குணங்கள் என்கின்றார். சமூகத்தில் பெண்கள் சமத்துவர்களாக கணிக்கப்பெற்ற போதிலும் இத்தகைய குணங்கள் அவர்களிடம் சிறப்பாக மேலோங்கி காணப்படவேண்டும். என வலியுறுத்தியுள்ளதாகவே எண்ணத்தோன்றுகின்றது. எனவே பெண்கள் பற்றிய இத்தகைய சிந்தனைகள் தொல்காப்பியர் காலத்திலேயே தோன்றப்பட்ட என்று குறிப்பிடத்தக்கது.

## திருவள்ளுவர்

இக்கால மண்ணில் மலர்ந்த வேறு ஓர் இலக்கிய நூலுக்கும் திருக்குறளுக்கு அமைந்தது போன்று இத்தகைய சிறப்பு வாய்ந்ததாவே கூறவேண்டும். இதனால்தான் திருக்குறள் உலகப்பொதுமறை என பெயர் பெறலாயிற்று இதனால் தான் சுப்பரமணிய பாரதியார் "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ் நாடு" என்று பாடியுள்ளனர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறாக வான் புகழ் பெற்ற வள்ளுவன் தான் திருக்குறளில் பெண்கள் பற்றி கூறும் போது

"பெண்ணிற் பெருள் தக்க யாவுள
கற்பெனுந் திண்மை யுண்டாகப் பெறின்"

என்கின்றார். பெண்களின் பெருமை பற்றி கூறுவதை விட வேறு என்ன இருக்கின்றது. என வினாவையே எழுப்பியுள்ளார் வள்ளுவர்.

"பெண்ணிற் பெருந்தகை யாவுள" கேள்வியும் நானே பதிலும் நானே என்பது போன்று வினாவை எழுப்பி சிறப்பு வாய்ந்தவள் பெண் என்ற பதிலும் கூறியுள்ளார் போலும்.

## ஔவையார்

ஆத்திசூடியும் கொன்றை வேந்தனும் எமக்கு அளித்த ஔவைப்பெருமாட்டி "கற்பெனப்படுவது செந்நிற பானம்" என்கின்றார்.

## கற்பியல்

சங்க இலக்கியங்களில் பல இடங்களில் கற்பு பற்றி பேசப்படுகின்றது. பெண்கள் ஆண்களுடன் சுதந்திரமாக பழகியப்போதும் கற்பு வாழ்க்கை கடைப்பிடிக்கப்பட்டமைக்கான சான்றுகள் கிடைக்கின்றன. கற்பு என்பது இல்வாழ்வில் ஈடுபட்ட பெண்களுடன் தொடர்புபடுத்தி சிறப்பாக அவர்கள் ஒரே ஆடவனுக்கு உள்ளத்தாலும், உடலாலும் உண்மையுடையவர்களாக வாழ்வதைக் குறிக்கும். தொல்காப்பிய கற்பியலில் "கற்பெனப்படுவது காணமோடு புணர மரபிற்-கிழவன் கிழத்தியர் கொடை குறி மாப்பினர் கொள்ளக் கொள்வதுவே" என்கின்றார்.

கணவன் இறந்த பின் உடன் கட்டை ஏறுதலே கற்பாக கொள்ளப்பட்டன. அவையானவ தலைக்கற்பு, இடைக்கற்பு, கடைக்கற்பு என்ற மூன்று கூறுகளை கொண்டுள்ளன. இக்காலத்தில் இவை முற்றாக மறுக்கப்பட்டுள்ளன. யுத்தம், அனார்த்தம் தற்செயல் போன்ற காரணங்களால் துணைவன் இறந்து விட்டால் குடும்பம் பிள்ளைகள் என்ற சிந்தனை துளிர்விட்டு புதிய வாழ்க்கையை தேடிக்கொள்கின்ற நிலைமை தற்காலத்தில் காணப்படுகின்றது. விதவை என்ற பெயரில் பெண்களுக்கு அளிக்கப்பட்ட சடங்கு முறைகள் அநீதி என்ற பெயரில் முற்று முழுதாக இல்லாதொழிக்கப்படுகின்றது.

## பெண் கல்வி

தொல்காப்பியர் காலம் தொட்டு பெண்கள் கல்வி அறிவில் சிறந்து விளங்கியுள்ளனர் என்பதை அறியமுடிகின்றது. சங்க கால புலவர்களில் ஏறக்குறை 60 பெண்பாற் புலவர்கள் இருந்துள்ளனர் அன்று தமிழ் நாட்டு பெண்களின் சீரையும் சிறப்பையும் கல்விச்செழுப்பையும் கண்டு தான் வள்ளுவ பெருந்தகை "பெண்ணிற் பெருந்தகை யாவுள..." என்று வினா எழுப்பியுள்ளனர் என்று தெரிகின்றது. மூட நம்பிக்கைகள், பழமைவாதம் மேலோங்கிக் காணப்பட்டாலும் பெண்கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டே வந்துள்ளன. இந்த தோற்றம் தான் இன்று பெண்களுக்கென தனியான கல்லூரிகள், பாடசாலைகள் என்ற அளவிற்கு வித்திட்டுள்ளன என்று கூறலாம்.

## அரசியலில் பெண்கள்.

2000ம் வருடங்களுக்கு முன்பே பெண்களும் அரசியலில் ஈடுபட்டுள்ளனர். என்பதை இலக்கியங்கள் ஊடாகவே அறியமுடிகின்றது. குறிப்பாக ஆசிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டுப்பெண்கள் இதனூடாக முதன்மைப் பெருகின்றனர். இவ்வமைப்பு முறை மேலை நாட்டவர்களின் வருகைக்கு முன்னும் பின்னுமாக வேறுபட்டு காணப்படுகின்றனர்.

மேலைநாட்டாரின் வருகைக்கு முன் பெண்கள் தாம் சார்ந்த அரசிற்கு மிகவும் விசுவாசமாக உழைத்துள்ளனர். அரசர்களுக்காக நெஞ்சுருகி வடக்கிருந்து இறந்த செய்திகளையும், அரசர் பாராட்டி ஒளையாருக்கு நெல்லிக்கனி கொடுத்த செய்தியும் அரசியலில் பெண்கள் கொண்டிருந்த ஈடுபாட்டையே காட்டுகின்றது.
மேலை நாட்டாரின் வருகையானது சமூக அரசியல் பொருளாதார பண்பாட்டு ரீதியிலான மாற்றங்களை தோற்றுவித்ததன் விளைவு ஆசிய நாடுகளில் பெண்களின் அரசியல் பிரவேசம் இன்று அதிகரித்துள்ளமை இன்று சுட்டிக்காட்டியே ஆகவேண்டும்.

உலகின் முதலாவது பெண் பிரதமர் என்ற பெருமை இலங்கையை சேர்ந்த திருமதி. ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவையே சாரும் அதனைத்தொடர்ந்து, முன்னால் இந்திய முன்னால் பிரதமர் இந்திரகாந்தி, இலங்கையின் முன்னால் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரத்துங்க, பங்களாதேஷில் பேகம் காலிதாஷியா, பாகிஸ்தானில் பெனாசிர் பூட்டோ என அடுக்கிக்கொண்டு செல்லும் அளவிற்கு பெண்களின் அரசியல் பிரவேசம் அமைகின்றது.

தொழில் ரீதியாக இருபாலாரும் விண்ணப்பிக்கும் ரீதியில் தொழில் முறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. பாதுகாப்பு படைகளிலும் பெண்களின் பங்களிப்பு காத்திரமாக அமைந்துள்ளமையம் குறிப்பிடத்தக்கன. இவ்வாறாக பெண்ணின் வீரம், திருமணம், போன்ற விடயங்களில் தாம் முடிவெடுக்கும் நிலைமை இன்று தோன்றியுள்ளமை பெண்களின் உரிமைகளை காட்டுகின்றன.

எனவே பெண்ணுரிமை, பெண்ணியம் பற்றிய சிந்தனைகள் இன்று வழுவடைந்து காணப்படுகின்றது என்பது உறுதி.

**கே. பாலகிருஸ்ணன்**
(முதுமாணி)
பட்ட பின் கல்வி டிப்ளோமா, பட்ட பின் தமிழ் டிப்ளோமா)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிமிர்ந்து நில்லேன்

கண்ணியம் எனும் போர்வையில்
கட்டுப்பாடுகள் பல
நித்தம் உன்னை வாட்டுகையில்
நிதர்சனம் காணாமல்
கண்ணீரில் விழிகளை
ஈரப்படுத்திக்கொண்டிருக்கின்றாய்


மாற்றம் எனும் சொல்லை தவிர
அனைத்தும் மாற கூடியதே
மாற்றமுறுமாறு பெண்ணே
சரித்திர பாதையில்
சரிநிகர் பாங்கை – நீ
சமப்படுத்திட வேண்டும்
அதற்கேனும் சற்று – நீயும்
நிமிர்ந்து நில்லேன்!

விடியலை தாரமாக்கியே
தொலைந்ததுன் வாழ்வு பொறுமையை
மந்திரமாய்
ஓத சொன்னது யார்?
எந்த புத்த உபதேசியின்
உபதேசத்தால்
மாண்டு போனது நுன் துணிவு

இதயமிழந்த மானிடரை
செப்பமிட வேண்டும்
துணிந்து வா துயர்போக்க
காளையரின் தொழிற்சாலையில்
யந்திரமல்ல நீ
சகித்தது போதும் சகியே...

சீதனம் எனும்
சிலந்திவலை பின்னலில்
சிக்குண்டு சீரற்று
எத்தனை யுகங்கள்
இன்னும் இப்படியே
சிலந்தி வலைகளை
துடைப்பதா?
சிலந்திகளை அழிப்பதா?
உன் கேள்வி
இரண்டையும் சேர்த்தே!
ஒன்றன் பின் ஒன்றாக

சி. புகழேந்திரன்
பிரதி அதிபர்
மமா/வ/ரிலாமுல்ல த. ம. வி
கந்தப்பளை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகத் தாயே...

உன்
முன்னோர் வாழ்வில்
என்றோ!
அஸ்தமித்துப்போன
சூரியனுக்கு– இன்னும்
உதயமே இல்லையா?

மழையிலும் வெயிலிலும்
நனைந்து வெந்து
வெதும்பி– மலையேறி
கொழுந்துப் பறித்து
முட்டுப் பிடுங்கி
வெடித்து போயுள்ள
உன் வெண்டை விரல்கள்
ஒத்தடம் பெறுவது
எப்போது தாயே....?

உன் கூன்விழுந்த
முதுக சுமக்கும்
கொழுந்து கூடையின் பாரம்
என் இதயத்தில்
வலிக்கிறது அம்மா...?

நசுக்கப்பட்ட
மூட்டைப்பூச்சிகளாய்
லயத்து வாழ்வோடு
முடக்கப்பட்டு
பனி மூட்டத்தோடு
பாறைகளாய் உறைந்துபோய்
தேயிலையுடனேயே
மடிந்து போவதுதான்
உன் வாழ்க்கையா.......?
பார்த்து மகிழ
பரிதவிக்கும் தமிழன்

வாழ்க்கை பசியாற
வட்ட ரொட்டி?
தாகம் தீர்க்க
சிரட்டை தண்ணி
இவைதான்– நீ
பெற்று வந்த வரங்களா...?

போதும்
முதுகெலும்பை முறிக்கும்
கொழுந்து கூடையை
கீழிறக்கும் தாயே....
நாளைய விடியலில்
இச்சுமை– இனி
உன் வாரிசுகளுக்கு வேண்டாம்

நிமிர்ந்து பார்...
மனிதன் விண்ணையே
கிழித்து முன்னேறுகிறான்
நீ மட்டுமேன்
மேக மூட்டத்துடன்
சோக மூட்டையாகிப்
போகின்றாய்...?

தணிந்து வா தாயே...
உன் கனவுகளும் கரைசேறும்
அஸ்த்தமனத்திலேயே
அச்சடிக்கப்பட்டுள்ள– உன்
வாழ்வு விடிவுபெறும்........

ஈ. இளங்கேஸ்வரி
உயர்தரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது நாட்டில் பெண்களின் அந்தஸ்த்தை உயர்த்தும்

# முக்கிய சம்பவங்கள்

**1927** முதலாவது பெண்களுக்கான அரசியல் குழு உருவாக்கம் (பெண்கள் குடியுரிமை சங்கம்)

**1930** கிராமிய பெண்களுக்கான முதலாவது பெண்கள் சங்கத்தின் உருவாக்கம் (மகிலா சமித்தி)

**1931** சர்வசன வாக்குரிமை அறிமுகம் ஆண்.பெண் சம வாக்குரிமை.

முதலாவது பெண் பிரதிநிதி சட்ட சபைக்கு தெரிவாகுதல் (திருமதி அடலின் மொலமுறே)

**1937** ஒரு சட்டம் மூலம்

நில சுரங்கங்களில் பெண்கள் தொழில் செய்வது தடை

**1939** ஒரு சட்ட மூலம் பிரசவ நலன்களை அறிமுகம் செய்தல்.

**1945** ஆரம்ப நிலையிலிருந்து பல்கலைக்கழகம் வரை இலவச கல்வியின் அறிமுகம்.

**1955** பொலிஸ் திணைக்களத்தில் பெண்கள் ஆட்சேர்ப்பு.

**1956** முதலாவது பெண் அமைச்சரின் நியமனம் (திருமதி விமலா விஜயவர்த்தனா)

**1956** ஒரு பாராளுமன்ற சட்டத்தின் மூலமாக வேலை செய்யும் பெண்களின் குறிப்பிட்ட தேவைகளை அங்கீகரித்தல்

**1960** உலகின் முதலாவது பெண் பிரதமரை தெரிதல் (திருமதி சிறிமா வோ பண்டாரநாயக்கா)

**1962** முதலாவது பெண் உயர்ஸ்தானிகரை நியமித்தல் (திருமதி லொறைன் செனவிரட்ன)

**1963** முதல் தடவையாக பெண்களை இலங்கை நிர்வாக சேவையின் ஒரு பகிர்வு அனுமதித்தல்

**1975** ஐக்கிய நாட்டு சர்வதேச பெண்கள் ஆண்டின் கோரிக்கைக் கிணங்க நிர்வாக சேவைக்கு அனுமதித்தல் பெண்கள் பங்கை 25 வீதம் உயர்த்தல்

**1979** முதல் தடவையாக மஜிஸ்ரேட் ஆகவும், நீதி மன்றங்களில் நீதிபதிகளாகவும் பெண்களை நியமித்தல்

**1979** முதல் தடவையாக ஆயுத படைக்கு பெண்கள் ஆட்சேர்ப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1981** பெண்களுக்கெதிரான சகல பாகுபாடுகளையும் நீக்க ஐக்கிய நாடுகள் மகாநாட்டின் தீர்மானத்தை உறுதிப்படுத்தல்

**1982** இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியல் அமைப்பு சட்டத்தில் பால் ரீதியான சகல பாகுபாடுகளையும் நீக்குவதற்குரிய தீர்மானத்தை சேர்த்தல்.

**1983** ஒரு பாராளுமன்ற சட்டத்தின் மூலமாக பொது சேவையிலுள்ள பெண்கள் இறந்தபின் அவரின் குழந்தைகளுக்கும், கணவருக்கும் ஓய்வூதிய கொடுப்பனவு ஏற்பாடு செய்யப்பட்டது.

**1985** தனியார் துறை ஊழியர்களுக்கும் முதல் இரண்டு உயிர் பிறப்புகளுக்கும் 84 வேலை நாட்களுக்கு பிரசவ விடுமுறையை அனுமதித்தல்.

**1993** சம வேலைக்கு சம ஊதியம் என்ற சர்வதேச தொழில் ஸ்தாபனத்தின் தீர்மானத்தை உறுதிபடுத்தல்

**1993** பெண்களின் சாசனத்தை கண்காணிக்கவும் அமுலாகக்கவும் மேன்மைதங்கிய ஜனாதிபதியால் ஒரு தேசிய குழுவை அமைத்தல்


**1994** முக்கியமாக பெண்கள் சம்பந்தமான குறைகளை கவனிப் பதற்காக பொலிஸ் நிலையங்களில் பெண்கள் பிரிவு ஒன்று ஸ்தாபித்தல்

**1994** நிர்வாக மாவட்டத்தில் அதி உயர் பதவியில் முதலாவதாக ஒரு பெண்ணை அமைச்சொன்றின் செயலாளராக நியமித்தல்

**1994** இலங்கை ஜனநாயக சோஷ லிச குடியரசிற்கு முதலாவது பெண் ஜனாதிபதி தெரிவு செய்யப்பட்டார் (திருமதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்க

இவர் இரண்டாவது முறையாகவும் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டமை உலக சிறப்பு மிக்கதாகும்


**நிர்மலா**
உயர்தரம் - 13
2008 - 2010





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருளில் பயணம்



மிகவும் இருளாக இருந்தது ஊரில் ஒரு குஞ்சு குலவான் கூட சத்தம் இல்லாதநேரம் நாயின் வள்வள் என்ற சத்தம் மட்டும் காதில் கேட்டுக்கொண்டிருந்தது. அந்த இருளில் ஒரு அழகிய மெல்லிய இடையுடன் ஓர் உருவம் வருவது தெரிகிறது நிச்சயம் அது சகுந்தலாவாகதான் இருக்க வேண்டும் காரணம் அவளை தவிர வெறுயாரும் அவ்விருளில் நடமாடுவது இல்லை.

கையில் ஏதோ? பையொன்றை எடுத்துக்கொண்டு தட்டு தடுமாறி குறுக்குபடியில் ஏறிவந்து வேனில் ஏறிக் கொண்டாள். அவ்வேனில் சுமார் 20 பேர் இருக்கும் அதில் ஆண்களும், பெண்களும் இருந்தனர். திரும்புவதற்கு கூட இடமில்லாத அவ்வேன் மெதுவாக நகர்ந்து சென்று ஆடை தொழிற்சாலையை அடைந்தது.

அப்படி சென்றும் கூட அன்று நேரத்திற்கு போக முடியவில்லை சகுந்தலாவும் அவளுடன் சென்ற பலரும் வெளியில் நின்றுக்கொண்டிருந்தனர். சகுந்தலா சிறிய வயதிலிருந்தே தைரியசாலிதான் இருந்தாலும் அவளின் வறுமை அவளை ஒன்றும் பேசவிடுவதில்லை இருந்தும் "சேர் நாங்கள் வேணுமென்றா லேட்டாக வறோம் காலையிலே 30 கிலோமீற்றர் தூரம் வரவேண்டாமா" என்று மெல்லிய தொனியில் கூறினாள். "சரி வேளைக்கு போங்க" என கூறிவிட்டு எலக்ஸ் அவ்விடத்தில் இருந்து அகன்றான்.

சரியாக 12:00 மணியிருக்கும் மணிசத்தம் கேட்கவும் வேகமாக சாப்பாட்டை எடுத்துக்கொண்டு சாப்பாட்டு அறைக்குள் சென்றாள் ரொட்டியை எடுத்து இரண்டுண்டு கடிக்கும் முன்னே "என்னா இவ்வளவு நேரம் சாப்பாடு. இப்படி போனா காமண்டை மூட வேண்டியதுதான். சீக்கிரம் போ!" என்ற சத்தத்தை கேட்டவுடன் ரொட்டியை வீசிவிட்டு மெசினை நோக்கி சென்றாள்.

அவள் தைத்துக் கொண்டிருந்தாலும் அவளின் மனசு வீட்டின் மீதே சுற்றிவந்தது நேற்றிரவு அவள் போகும் வரை விழித்திருந்து "அம்மா எனக்கு நாளைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும் போது பிக்கா வாங்கிவா" என்று சொன்ன சிந்துவின் ஞாபகம் தான் அவளை வறுத்தியது எவ்வாறு வாங்கி செல்வது என்ற அச்சம் மனதில் தோன்றிய போதே அவளின் நண்பியான சாந்தியின் ஞாபகம் வரவும் மனதை சமாதானம் படுத்திக்கொண்டாள்.

வேலை முடிந்தது மாலை 5 மணியிருக்கும் உடனே சாந்தியிடம் போய் "சாந்தி எனக்கு 50ரூபா சல்லிதா" என அவள் கேட்டவுடன் சாந்தி அதனை கொடுத்துவிட்டு சென்றாள் சகுந்தலாவும் வேகமாக வேனை நோக்கி செல்கிறாள்.

வேன் மெதுவாக நகர்ந்தது நுவரெலியா நகரை அடைந்தும் டைவரிடம் கூறி பிஸ்கட் பெக்கட் ஒன்றையும் வாங்கி வைத்துக்கொண்டாள் வேன் நகர்ந்து சென்ஜோன்சை அடைந்தது.

வழமைபோல் தட்டு தடுமாறி வீட்டை நோக்கி செல்கிறாள் நாயின் "வள்...வள்" என்ற சத்தம் மட்டுமே காதில் கேட்கிறது ஊரில் வேறு சத்தம் எதுவும் இல்லை

வீட்டை அடைந்ததும் தூக்கத்தில் காணப்பட்ட சிந்துவை, "சிந்து எழும்புடா.. அம்மா வந்துட்டேன்" என சிந்துவை தட்டவும் சிந்து கண்ணை கசக்கிகொண்டு எழுந்தவுடன் கட்டி அணைத்து முத்தம் கொடுத்து பிஸ்கட்டை கொடுக்கிறாள் பாதியை சாப்பிட்டுவிட்டு அப்படியே சிந்து தூங்கிவிட்டாள்.

சகுந்தலா அடுப்பில் இருந்த சாப்பாட்டை சூடாக்கி தனது கணவனுக்கு கொடுத்து தானும் சாப்பிட்டுவிட்டு சிந்துவின் தலையை நெருடியவாரே தூங்கி விட்டாள்.

இவ்வாறே நாட்கள் கழிந்தது ஓய்வு என்று எதுவும் இல்லை வேலைக்கு செல்லும் முன் அழகாகவும் பருமனாகவும் காணப்பட்ட அவளது உடம்பு இப்போது பார்த்தால் 40 வயதை அடைந்ததை போல் தோற்றமாகிவிட்டது.

அன்றுதான் அவளுக்கு மகிழ்ச்சியான நாள் வழமைப் போல வேலைக்குச் செல்கின்றாள். வேலையை முடித்துவிட்டு ஏதோ சொல்ல முடியாத மகிழ்ச்சியுடன் சம்பளத்தை பெற செல்கிறாள். சம்பளத்தை பெற்று கவரை பார்த்தவுடன் அவளுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை மூவாயிரத்து நூற்று எழுபத்தெட்டு 'ரூபாதான் அம்மாத சம்பளமாக இருந்தது. வழமையைவிட ஆயிரம் ரூபா குறைவாகவே காணப்பட்டது. உடனே உள்ளே சென்று "சேர் எனக்கு ஆயிரம் ரூபா சம்பளம் குறைவாக இருக்கு சேர்" என மெல்லிய குறலில் கேட்கிறாள் உடனே "நீ தைத்த தைப்பு அப்படி டெமேச் அதிகம். ஏ சம்பளத்திலயா அத கொடுக்கனும்" என கூறவும் அவளுக்கு காலையில் இருந்த சந்தோசத்திற்கும் மாறாக அவளது கண்ணீர் நிலத்தை ஈரப்படுத்தியது.

கிடைத்த சம்பளத்தில் வேனுக்கு ஆயிரம் ரூபா போக மீதி பணத்தை கையில் வைத்துக்கொண்டு ஊனமான தனது கணவனையும், தனது குழந்தையையும் நினைத்துக்கொண்டு வழமை போல இருளில் தட்டு தடுமாறிக்கொண்டே வீட்டை நோக்கி செல்கிறாள்.

**திரு. ச. ரவி**
ஆசிரியர்
மமா/வ/ரிலாமுல்ல த. ம. வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச மகளிர் தினமும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளும்

உலகளாவிய ரீதியில் பெண்கள் இன்று பலவிதமான வன்முறைகளுக்கு உட்படுத்தப்படுகின்றனர். பெண்களுக்கு எதிரான வன்முறைகளை வெளி உலகிற்கு காட்டி அதற்கான நியாயமான தீர்க்கமான முடிவுகளை எடுப்பதற்காக சர்வதேச மகளிர் தினம் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் ஒழிப்பு சர்வதேச தினம் ஆகியன முன்வைக்கப்படுகின்றன.

இருப்பினும் இத்தகைய வன்முறைகள் குறைந்ததாக இல்லை இத்தகைய வன்முறைகளுள் சட்டரீதியான நடவடிக்கைகளுக்கு உட்படுபவையும் வெளியே தெரிய வருபவையும் மிகவும் சொற்பமானவையே வெளியே வராதவையாகவும் சட்டரீதியான நடவடிக்கைகளுக்கு உட்படாதவையாகவும் மூடி மறைக்கப்படுபவைகளும் மிகவும் அதிகமானவையாகும். பெண்கள் மீதான வன்முறை இன்றைய சமூகத்தில் பற்பல வடிவங்களில் வெளிப்படுகின்றன தொழிற்சாலைகளில், அலுவலகங்களில், மருத்துவமனைகளில், பாடசாலைகளில் என்று இவ்வாறு அடுக்கிக் கொண்டே போகலாம்.

பெண்களுக்கெதிரான வன்முறைகளுள் பாலியல் வன்முறை பிராதன இடத்தை வகிக்கின்றது. பாலியல் வன்முறை எனும் போது விருப்பத்துக்கு மாறாக வற்புறுத்தி உறவு கொள்ள நிர்பந்திப்பது, விருப்பத்துக்கு மாறாக பாலியல் தூண்டல்களை ஏற்படுத்தக் கூடியவாறான நடத்தைகளை புரிதல், ஏமாற்றி அல்லது ஆள்மாறாட்டம் செய்து உறவு கொள்ளச் செய்தல், ஏதேனும் ஒரு உணவுப் பொருளுடன் அல்லது எதாவது பாணத்துடன் போதை தரக்கூடிய பொருளைக் கலந்து கொடுத்து உறவு கொள்வது, துணைவியின் சம்மதமில்லாமல் உறவு கொள்வது என்பனவும் பாலியல் வன்முறைக்குள் அடங்குகின்றன.

அதிகளவு வருமானத்தைத் தரக்கூடியதும் குற்றவியல் சட்டத்திலிருந்து குறைந்தமட்டத்திலான குற்றத்தையும் கொண்ட பாலியல் அடிமைத்தொழில் அமெரிக்கா, கனடா, ஐரோப்பிய நாடுகள் உள்ளடங்களாக 192 நாடுகளில் காணப்படுவதாக கூறப்படுகின்றது.

ஆபிரிக்கா, ஆசியா, நாடுகளிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டு அல்லது கடத்தி வரப்படும் பெண்களும், சிறுவர்களுமே இத்தொழிலில் அதிகளவு ஈடுபடுத்தப்படுகின்றனர்.

பாலியல் அடிமைகள் அதிகளவில் பெருகிக்காணப்படுவதற்கான காரணம் அதிகளவு வருமானம் கிடைப்பதும் சட்டத்திலருந்து தப்பித்துக்கொள்ளும் வரையிலான பல ஓட்டைகள் இருப்பதனாலாகும்.

இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் எந்த நேரமாக இருக்கட்டும் நெருக்கடிமிக்க பஸ்களிலும், இரயில்களிலும் பெண்கள் பிரயாணம் செய்வது அவர்களுக்கு மகிழ்ச்சிகரமான அனுபவம் ஒன்றை அழிக்காது. உடல்களை வேண்டுமென்று தொடுவதற்கு மேலதிகமான ஆபாசமான விதத்தில் அபிநயம் காட்டுவதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசௌகரியமாக தோற்றமளிப்பதும் பெண்களுக்கு அதுவொரு பயங்கரமான அனுபவமாகவே முடிகின்றது. இதுகுறித்து அண்மையில் இலங்கையில் நடத்தப்பட்ட கணிப்பீடு மூலம் அறியவருவதாவது, கணிப்பீடு நடாத்தப்பட்ட 200 பெண்களில் 188 பெண்கள் தனியார் பஸ்களில் பிரயாணம் செய்யும்போது வாழ்க்கையில் ஒரு தடவையாவது ஏதோ ஒரு வேளையில் தொந்தரவுக்குள்ளாகியுள்ளனர்.

இளவயதான பெண்களை குறிப்பாக 11 - 20 வயதிற்கு உற்பட்டவர்களே அதிகளவு ஊறுபடும் நிலையில் இருந்திருக்கின்றனர்.

தரக்குறைவாக நடத்துதல் எனும்போது நவீன காலத்தில் ஈமெயில், எஸ்.எம்.எஸ், எம்.எம்.எஸ், தொலைபேசி தபால் போன்ற எந்தவொரு தொடர்பு சாதனத்தின் ஊடாக திரும்பி அவசியம் எதுவும் இல்லாமல் மீள மீள தொடர்புக்கொண்டு தொல்லைக் கொடுத்தல் அல்லது அச்சுறுத்தல் போன்றவையாகும்.

உலக சுகாதார நிறுவனம் அண்மையில் மேற்கொண்ட ஆய்வொன்றில் உலகில் "வீதி விபத்துக்களையும், மலேரியா, பன்றிக்காய்ச்சல், போன்ற நோய்களையும் விட பெண்களுக்கெதிரான வன்முறைகள் அவர்களின் பெரும் எண்ணிக்கையான வர்களின் உடல் ஆரோக்கியத்தை பாதிப்பதாக தெரிவிக்கின்றது. வன்முறைகளை (பாலியல்) அனுபவிக்கும் பெண்கள் எச்.ஐ.வி யின் தொற்றுக்கு இலக்காகும் ஆபத்தும் அதிகமான இருப்பதும் தெரியவருகின்றது. மேலும் கொலைக்கு ஆளாகும் பெண்களில் அரைவாசிப்பேர் அவர்களது தற்போதைய அல்லது முன்னால் கணவர்களின் அல்லது துணைவர்களின் கைகளினா லேயே மரணத்தை தழுவுகின்றனர் என்று உலகளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

இவ்வாறான சம்பவங்கள் இருந்தபோதிலும் 21ஆம் நூற்றாண்டிலும் கணணி யுகத்திலும் ஆக்க பூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதா? அல்லது இதற்கு மாற்று தீர்வு எதுவும் காணப்படுகின்றதா? என்று நோக்கும் போது ஒரு கேள்விக்குறியான நிலையே எம்மத்தியில் காணப்படுகின்றது. எனவே எதிர்காலத்திலாவது பெண்கள் மீதான சரியான தீர்வை கடைப்பிடிப்பதற்கு தயார்படுத்தப்படுகின்றதா? அல்லது பெண்கள் சம உரிமையில், சமத்துவத்தில் பங்குபோட்டாலும் பெண்கள் மீதான வன்முறைக்கு ஏற்ற ஒரு தீர்வை ஏற்படுத்த தவறினால் எவ்வித சமத்துவம் பேசினாலும் பெண்கள் மீதான வன்முறைகளை ஒழிப்பது கடினமாகும்.

**"பெண்களுக்கெதிரான வன்முறைகள் என்று வரும்போது உலகில் நாகரீகமான சமுதாயம் என்று எதுவுமே இல்லை."**

**செ. விஜயகுமார்**
ஆசிரியர்
மமா/வ/ரிலாமுல்ல த. ம. வி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணே! உன் வேதனைகளை சாதனைகளாக்கு

இந்த மண்ணில் மனிதர்களாக பிறந்தோர் அனைவரும் ஏதாவது ஒரு ஆற்றல் நிறைந்தவர்களாகவே இருக்கிறார்கள் ஆனால் பலர் இவ்வாற்றலை வெளிக்கொணரும் வழி தெரியாமல் அதை தமக்குள்ளேயே புதைத்து விடுகின்றார்கள். அதுவும் பெண்களாக இருந்தாலோ கேட்கவே தேவையில்லை. அவர்களின் ஆற்றல் வெளிவந்து விடக்கூடாது என்பதற்காக பல அடக்கு முறைகள் மேற்கொள்கின்றர். பெண் என்றால் பேயும் இரங்கும் என்பார்கள். ஆனால் மனிதர்கள் இரங்குவதில்லை.

பழங்காலம் தொட்டு பெண்கள் அடிமைகளாகவே நடத்தி வந்துள்ளது எமது சமுதாயம் அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பதற்கு என்ற நிலைபாடு எம்முன்னோர் மத்தியில் காணப்பட்ட அபிப்பிராயமாகும். அதனை தகர்தெரிந்தது இன்று பெண்களின் முன்னேற்றம் பலதுறைகளிலும் காணப்படுகின்றது. என்றால் மிகையாகாது பழங்காலத்தில் பெண்களின் கல்வி நிலை பின்தங்கியே காணப்பட்டது. பாடசாலைக்கு பெண்கள் சென்று படித்தால் கூட ஒழுக்கம் சீர்குழைந்துவிடும் என்ற ரீதியில் பெண்களை அடக்கி ஒடுக்கி வைத்திருந்தது. ஆண்கள் தான் முன்னேற வேண்டும் அவர்களால் தான் அனைத்து விடயங்களையும் செய்ய முடியும் என்ற நிலைப்பாடு மேலோங்கி காணப்பட்டது. ஆண், பெண் என்ற உயர்வு, தாழ்வு வேறுபாடு (பாகுபாடு) பெற்றோர் மத்தியிலேயே வலுப்பெற்று இருந்தது. ஆண் பிள்ளைகள் மட்டும் படித்து பட்டம் பெற்று, உத்தியோகம் பார்த்தால் போதும் என்று பல பெற்றோர்கள் ஒரு காலத்தில் இருந்தனர். ஆனால் அந்நிலை இன்று மாறி பெண்கள் பலதுறைகளிலும் முன்னேறிகொண்டு வருவதோடு ஆண் பிள்ளைகளை விட பெண்பிள்ளைகளே பெற்றோருக்கு பேருதவியாளர்களாகவும் பெண்பிள்ளைகளே விளங்கிவருகின்றனர் என்றால் ஐயமில்லை.

ஒரு காலத்தில் பெண்களுக்கு வீட்டுரிமை தொட்டு வாக்குரிமைவரை தடை செய்யப்பட்டே காணப்பட்டது. வீட்டிலும் சரி, நாட்டிலும் சரி பெண்களின் அதிகார பங்களிப்பு குறைவாகவே காணப்பட்டது. ஆனால் இன்று அந்நிலைமாறி "யானைக்கு ஒரு காலம் வந்தால் பூனைக்கு ஒரு காலம் வரும்" என்பதற்கிணங்க பல துறைகளிலும் முன்னேறி வருவதை காணமுடிகின்றது. அரசியலும் இன்று பெண்களின் அங்கத்துவம் அதிகரித்துள்ளமை ஒரு முக்கிய அம்சமாகும். எமது நாட்டை பொருத்தவரை முதலாவது பெண் பிரதமர் (திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க) பெண் ஜனாதிபதி (திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க) ஆகியோர் அரசியலில் ஈடுபட்டு தமது ஆக்கத்தினை செலுத்தி இருந்தமையானது பெண்களின் அரசியல் சாதனையை பறைசாற்றுகின்றது. அதுமட்டுன்றி உலக அசசியலிலும் பெண்களின் ஈடுபாடு வெகுவாக அதிகரித்துள்ளமையை காணமுடிகிறது.

அன்று பாடசாலை செல்லும் பெண்களின் வீதமோ குறைவு ஆனால் இன்று பாடசாலைகளில் கல்வி கற்கும் பிள்ளைகளில் அதிகமானோர் பெண்களே அதிலும் அதிகளவில் பரீட்சையில் சித்தியடைவதும் பெண்களே இப்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்துறைகளை எடுத்துக்கொண்டாலும் பெண்களின் பங்களிப்பு வெகுவாக என்றே அதிகரித்தே காணப்பட்டு வருகின்றது அதில் எவ்வித ஐயமுமில்லை

உலகளாவிய ரீதியில் பெண் ஜனாதிபதி, பிரதமர், விண்வெளிபயணி, சாரதி, சட்டத்தரணி, வைத்தியர், ஆசிரியர்... என பலத்துறைகளிலும் பெண்களின் பங்களிப்பு வெகுவாக உயர்ந்து கொண்டே செல்கிறது. பல இடங்களிலும் பார்க்கும் போது ஆண்களைவிட பெண்களே பல துறைகளிலும் முன்னேறி காணப்படுகின்றனர். இருப்பினும் வாழ்க்கை என்று வரும் போது பெண்களை ஆண்கள் அடிமைகளாகவே நடத்துகின்றனர். திருமணம் என்று வரும் போது சீதனம் என்ற பெயரில் பெண்களை விலைபேசுகின்றார்கள் ஆண்கள் இந்நிலை இன்றும் தொடர்ந்து கொண்டு தான் இருக்கின்றது. அன்று பாரதி பெண் அடிமைக்கு எதிரான பல கருத்துக்களை வெளியிட்டிருந்தார். அதுவும் நடைமுறைக்கு சாத்தியமாகவில்லை. பாவம் பாரதி இன்று உயிரோடு இருந்திருந்தால் பெண்களின் நிலைபாட்டை கண்டு வேதனைதான் அடைந்திருப்பார். பெண்ணுரிமை பேணப்பட வேண்டும் பெண் அடிமை ஒழிக்கப்பட வேண்டும். என்ற கருத்தெல்லாம் ஏட்டளவிலும், பேச்சளவிலும் தான் இருக்கின்றது. நடைமுறையில் அவை சாத்தியமாவதில்லை என்றாலும் "விழுந்தாலும் எழுவோம் விதைகளாய்" என்பறகிணங்க பெண்ணே உன்னை அடிமை படுத்தும் வர்க்கம் வளர்ந்தாலும் உன்னுடைய சாதனைகள் விருட்சமாய் என்றென்றும் வளரட்டும் வளர வேண்டும் நாளைய தலைமுறைக்காக.

**த. அருள்மொழி**

**ஆசிரியை**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மமா/வ ரிலாமுல்ல தமிழ் மகா வித்தியாலயம்

| அதிபர், ஆசிரியர் பெயர் | முதல் நியமன ஆண்டு | நியமனம் | போதனாதுறை |
|---|---|---|---|
| திரு.பாலகிருஸ்ணன் (அதிபர்) | 1983 | பெ.பா.நி | தமிழ் |
| திருமதி S. கலாதேவி (உபஅதிபர்) | 1992 | பெ.பா.நி | விஞ்ஞானம் |
| திரு.S. புகழேந்திரன் (பிரதிஅதிபர்) | 1997 | பெ.பா.நி | |
| திரு. A. இராஜேந்திரன் | 1997 | பெ.பா.நி | கணிதம் |
| திரு. A. அன்புரோஸ் | 2000 | பெ.பா.நி | வரத்தகம் |
| திரு. G. ஜோர்ஜ் | 2000 | பெ.பா.நி | சுகாதாரம், உடற்கல்வி |
| திரு. S. கமல்ராஜ் | 2000 | பெ.பா.நி | சமயம் |
| திரு. V. இந்திரச்செல்வன் | 1997 | பெ.பா.நி | சமயம் |
| திரு. V. பூர்ணலிங்கம் | 1997 | பெ.பா.நி | தகவல் தொழிநுட்பம் |
| திருமதி. K.P. சிரோமி கீர்த்திகா | 2001 | சமுர்த்தி | சிங்களம் |
| திரு. R. ஸ்ரீமோகன் (ஆரம்ப பிரிவு பகுதி தலைவர்) | 2004 | கல்வியியற் கல்லூரி | ஒன்றிணைந்த பாடம் |
| திரு. R. ரமவேந்திரன் | 2004 | கல்வியியற் கல்லூரி | வாசிகசாலை |
| திரு. S. ரவி | 2004 | கல்வியியற் கல்லூரி | தமிழ் |
| திரு. T. விஜயாநந்தன் | 2005 | கல்வியியற் கல்லூரி | ஆங்கிலம் |
| திரு. S. சசிகுமார் | 2005 | கல்வியியற் கல்லூரி | அரசியல் |
| திருமதி. R. லலிதா | 2003 | கல்வியியற் கல்லூரி | ஒன்றிணைந்த பாடம் |
| செல்வி. P. திலகேஸ்வரி | 2006 | கல்வியியற் கல்லூரி | சமுகவியல் |
| திரு. K. ராஜபக்ஸ | 1994 | போட்டிப்பரீட்சை | சிங்களம் |
| செல்வி. V. நிர்மலா | 2007 | பெ.பா.நி | விவசாயம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் விபர பட்டியல்

| கல்வி பிரிவு | நடப்பு ஆண்டு | தகைமை |
|---|---|---|
| உயர்தரம் | கல்விமாணி கற்கைநெறியின் பிரதி இணைப்பாளர் | முதுமாணி, Dip in Eng, Tam |
| இடைநிலை | | பயிற்றப்பட்ட ஆசிரியர் |
| இடைநிலை | | பயிற்றப்பட்ட ஆசிரியர் |
| இடைநிலை | | பயிற்றப்பட்ட ஆசிரியர் |
| இடைநிலை | கல்விமாணி பட்ட கற்கை நெறி (Read) | பயிற்றப்பட்ட ஆசிரியர் |
| இடைநிலை | | பயிற்றப்பட்ட ஆசிரியர் |
| இடைநிலை | | பயிற்றப்பட்ட ஆசிரியர் |
| இடைநிலை | உளவியல் கற்கை நெறி (Read) | பயிற்றப்பட்ட ஆசிரியர் |
| இடைநிலை | கல்விமாணிபட்ட கற்கை நெறி (Read) | பயிற்றப்பட்ட ஆசிரியர் |
| ஆரம்பபிரிவு | | |
| ஆரம்பபிரிவு | | கற்பித்தலில் தேசிய டிப்ளோமா |
| 1 - 13 | கல்விமாணிபட்ட கற்கை நெறி (Read) | கற்பித்தலில் தேசிய டிப்ளோமா |
| உயர்தரம் | கல்விமாணிபட்ட கற்கை நெறி (Read) | கற்பித்தலில் தேசிய டிப்ளோமா |
| இடைநிலை / உயர்தரம் | BA (Read) | கற்பித்தலில் தேசிய டிப்ளோமா |
| உயர்தரம் | கல்விமாணிபட்ட கற்கை நெறி (Reading) | கற்பித்தலில் தேசிய டிப்ளோமா |
| ஆரம்ப பிரிவு | முதற்கலை தேர்வு (Read) | கற்பித்தலில் தேசிய டிப்ளோமா |
| இடைநிலை | கல்விமாணிபட்ட கற்கை நெறி (Reading) | கற்பித்தலில் தேசிய டிப்ளோமா |
| ஆரம்பகல்வி | | பயிற்றப்பட்ட ஆசிரியர் |
| இடைநிலை | கொட்டகலை ஆசிரியர் பயிற்சி கலாசாலை | க.பொ.த (உ.த) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| அதிபர், ஆசிரியர் பெயர் | முதல் நியமன ஆண்டு | நியமனம் | போதனாதுறை |
|---|---|---|---|
| செல்வி. N. சங்கீதா | 2007 | பெ.பா.நி | சமயம் |
| திருமதி. P. பிரியதர்ஷினி | 2007 | பெ.பா.நி | சித்திரம் |
| செல்வி. N. ஜோதிமலர் | 2007 | பெ.பா.நி | விஞ்ஞானம் |
| திருமதி. D. யோகினி | 2007 | பெ.பா.நி | பொது |
| செல்வி D. டொரின் கிருஷாந்தி | 2007 | பெ.பா.நி | உடற்கல்வி |
| திரு. S. விஜயகுமார் | 2007 | பெ.பா.நி | தமிழ் |
| செல்வி. K. ஜோய்பிரபா | 2007 | பெ.பா.நி | கிறிஸ்தவம் |
| திருமதி. K. சந்திரவதனா | 2007 | பெ.பா.நி | ஒன்றிணைந்த பாடம் |
| திருமதி. R. லோகேஸ்வரி | 2007 | பெ.பா.நி | மனைப்பொருளியல் |
| திரு. M. ஞானசேகரன் | 2007 | பெ.பா.நி | சமூகவியல் |
| திருமதி G. கோகிலா | 2007 | பெ.பா.நி | கணிதம் |
| செல்வி. A. நிர்மலாஜோதி | 2007 | பெ.பா.நி | தமிழ் |
| திருமதி. P. சசிகலா | 2007 | பெ.பா.நி | சமூகவியல் |
| திரு S. சசிகுமார் | 2007 | பெ.பா.நி | ஆங்கிலம் |
| திரு K. காலதாஸன் | 2007 | பெ.பா.நி | விஞ்ஞானம் |
| திரு. D. போல் திருச்செல்வம் | 2007 | பெ.பா.நி | ஒன்றிணைந்த பாடம் |
| திருமதி P. மணிமேகலை | 1997 | பெ.பா.நி | ஒன்றிணைந்த பாடம் |
| திரு L. இராமசந்திரன் | 1990 | பெ.பா.நி | தமிழ், புவியியல் |
| திரு. R. பரமேஸ்வரன் | 2007 | கல்வியியற் கல்லூரி | விஞ்ஞானம் |
| செல்வி. C. தேவிகா | 2008 | கல்வியியற் கல்லூரி | விஞ்ஞானம் |
| திரு. K. ரதகுமார் | 2008 | கல்வியியற் கல்லூரி | ஒன்றிணைந்த பாடம் |
| திரு. S. அருளானந்தன் | 2009 | கல்வியியற் கல்லூரி | தமிழ் |
| திரு. N. விஜேந்திரா | 2009 | கல்வியியற் கல்லூரி | சமூகவியல் |
| செல்வி. D. வினோதினி | 2010 | பெ.பா.நி | கணிதம் |
| செல்வி. T. அருள்மொழி | 2010 | பெ.பா.நி | தமிழ் |
| செல்வி. M. சன்முகமாலினி | 2010 | பெ.பா.நி | ஆங்கிலம் |
| செல்வி. S. ஜெயகுமார் | 2010 | பெ.பா.நி | ஒன்றிணைந்தபாடம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கல்வி பிரிவு | நடப்பு ஆண்டு | தகைமை |
|---|---|---|
| இடைநிலை | கொட்டகலை ஆசிரியர் பயிற்சி கலாசாலை | க.பொ.த (உ.த) |
| இடைநிலை | அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சி கலாசாலை | க.பொ.த (உ.த) |
| இடைநிலை | மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சி கலாசாலை | க.பொ.த (உ.த) |
| இடைநிலை | வார இறுதி பயிற்சி நெறி, கொட்டகலை | க.பொ.த (உ.த) |
| இடைநிலை | அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சி கலாசாலை | க.பொ.த (உ.த) |
| இடைநிலை | வார இறுதி பயிற்சி நெறி, கொட்டகலை | க.பொ.த (உ.த) |
| இடைநிலை | வார இறுதி பயிற்சி நெறி, கொட்டகலை | க.பொ.த (உ.த) |
| ஆரம்பபிரிவு | கொட்டகலை ஆசிரியர் பயிற்சி கலாசாலை | க.பொ.த (உ.த) |
| இடைநிலை | மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சி கலாசாலை | க.பொ.த (உ.த) |
| இடைநிலை | மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சி கலாசாலை | க.பொ.த (உ.த) |
| இடைநிலை | வார இறுதி பயிற்சி நெறி, கொட்டகலை | க.பொ.த (உ.த) |
| இடைநிலை | வார இறுதி பயிற்சி நெறி, கொட்டகலை | க.பொ.த (உ.த) |
| இடைநிலை | கொட்டகலை ஆசிரியர் பயிற்சி கலாசாலை | க.பொ.த (உ.த) |
| இடைநிலை | அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சி கலாசாலை | க.பொ.த (உ.த) |
| இடைநிலை | மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சி கலாசாலை | க.பொ.த (உ.த) |
| ஆரம்பபிரிவு | வார இறுதி பயிற்சி நெறி, கொட்டகலை | க.பொ.த (உ.த) |
| ஆரம்பபிரிவு | | பயிற்றப்பட்ட ஆசிரியர் |
| உயர்தரம் | வளவாளர் (மானுட விஞ்ஞானம்) | BA, பயிற்றப்பட்ட ஆசிரியர் |
| இடைநிலை | விஞ்ஞானமாணி கற்கை நெறி | கற்பித்தலில் தேசிய டிப்ளோமா |
| இடைநிலை | விஞ்ஞானமாணி கற்கை நெறி | கற்பித்தலில் தேசிய டிப்ளோமா |
| ஆரம்பபிரிவு | முதற்கலை தேர்வு | கற்பித்தலில் தேசிய டிப்ளோமா |
| இடைநிலை | BA (Reading) | கற்பித்தலில் தேசிய டிப்ளோமா |
| இடைநிலை | BA (Reading) | கற்பித்தலில் தேசிய டிப்ளோமா |
| இடைநிலை | | க.பொ.த (உ.த) |
| இடைநிலை | | BA |
| இடைநிலை | வார இறுதி பயிற்சி நெறி, தலவாக்கலை | க.பொ.த (உ.த) |
| ஆரம்பபிரிவு | முதற்கலை தேர்வு | க.பொ.த (உ.த) |

தொகுப்பு: ஆசிரியை செல்வி. P. திலகேஸ்வரி (செயலாளர்)
சமூகவியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல், தொழிற்சங்க செயற்பாடுகளில் மலைகப் பெண்களின் முக்கியத்துவம்?

பாராளுமன்றம் கலைக்கப்பட்டு பொது தேர்தலுக்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ள நிலையில் மகளீர் தினத்தினை எதிர்கொள்வதற்கான ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன.

மகளீர் தினம் உலகலாவிய ரீதியில் அனுட்டிக்கப்பட்டாலும் பாதிக்கப்பட்ட அல்லது ஒடுக்கப்படுகின்ற சமூகங்களில் உள்ள பெண்களின் நிலைமை பெரியளவில் கவனத்தில் எடுத்து கொள்ளப்படுவதில்லை. அல்லது அந்த பெண்களின் பக்கம் நின்று மகளீர் தினம் அனுட்டிக்கப்படுவதில்லை எனலாம்.

குறிப்பாக ஆசிய நாடுகளில் அதுவும் இந்தியா இலங்கை போன்ற நாடுகளில் இதுதான் நிலைமை. இலங்கையில் விசேடமாக மலையகத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பேசப்படுவதில்லை. பொது அடிப்படையில் பெண்களின் உரிமைகள் பற்றியே பேசப்படுகின்றது.

மலையகப் பெருந்தோட்டத்துறை தொழிலாளர்களில் நூற்றுக்கு 76 வீதத்திற்கும் அதிகமானவர்கள் பெண்கள். ஆசிரியர் துறையிலும் நூற்றுக்கு 65 வீதம் பெண்கள் அதேவேளை மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் புரியும் பெண்களிலும் நுற்றுக்கு 30 சதவீதமானவர்கள் மலையகப்பெண்கள்.

இது இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் அதிகமான பங்களிப்பை வழங்குகின்றது. அத்துடன் மொத்தத் தேசிய உற்பத்தியில் 33 சதவீதம் இந்த பெண்களுடைய வருமானம் உள்ளடக்கப்படுகின்றது. (இலங்கை மத்திய வங்கியின் 2009 ஆம் ஆண்டு அறிக்கை)

1924 ஆம் ஆண்டுக்கு பின்பு பெருந் தொகையான தொழிலாளர்கள் கோப்பி, தேயிலை, இறப்பர் பயிர்செய்கையில் ஈடுபடுவதற்காக இந்தியாவில் இருந்து அழைத்து வரப்பட்டனர் கால்நடையாக வரும் வழியில் நீர்யின்றியும், உணவின்றியும், அடிப்படை வசதிகளற்ற நிலையில் நோய்கள் காரணமாகவும் பல இன்னல்களை எதிர்நோக்கியதன் விளைவாக ஆயிரக்கணக்கானோர் இறந்தனர். எஞ்சியவர்கள் கடனாளியாகவே வாழ்க்கையை ஆரம்பித்தனர். இவர்களின் உழைப்பு ஒன்று மட்டுமே இவர்களின் பலமாக காணப்பட்டது.

உதிரத்தை உரமாக்கி, நாட்டின் பொருளாதாரத்திற்கு உயிர்கொடுத்து மரணித்துக் கொண்டியிருக்கும் மலையக மக்களுக்கே உரித்தான துன்பங்கள், சுரண்டல்கள், ஒடுக்குமுறைகள், ஏமாற்ற ங்கள், பலாத்காரங்கள் போன்றவற்றிற்கு பெண்கள் முகம்கொடுக்கின்றனர்.

1927 ஆம் ஆண்டு லேடி டயஸ் பண்டாரநாயக்க அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்ட "இலங்கை வாழ் மகளிர் சங்கத்தின் (Women's Franchisee Association) இணைச்செயலாளராக கடமையாற்றிய திருமதி நல்லம்மா சத்யலக்ஸ்வரி பெண்களுக்கு வாக்குரிமையை பெருவதற்கும் பெண்கள் அரசியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழிப்புணர்வு பெறுவதற்கும் அரசியலில் பங்குபெறுவதற்கும் தீவிரமாக செயல்பட்டார் அதனைப்போலவே இம் மக்களின் துயரங்களுக்கு விடை கொடுப்பதற்காக 1931 ம் ஆண்டு டொனமூர் அரசியல் யாப்பு உருவாக்கப்பட்ட காலப்பகுதியில் கோ.நடேசய்யர் என்பவரால் அகில இலங்கை தோட்ட தொழிலாளர் சம்மேளனம் உருவாக்கப்பட்டது. மலையக மக்களின் விடிவுக்காக குரல் கொடுக்க அவரது துணைவியரான திருமதி மீனாச்சியம்மையாரினால் மகாகவி பாரதியாரின் பாடல்களை மக்களின் மனதினை தொடும் வகையில் பாடினார்.

1940 ஆம் ஆண்டு வரலாற்று முக்கியத்துவமுடைய போராட்டங்களில் பங்குபெறுவதற்கு ஆசிரியரான ஜெயகாந்தனின் இலங்கை சமசமாஜக் கட்சியுடன் தொடர்பு வைத்திருந்தமையும் அதே தோட்டத்தில் வேலை செய்த பெண்ணை திருமணம் முடித்தையும் காரணங்களாக கூறி இவரை இடமாற்றம் செய்தனர்.

அக் காலப்பகுதியில் 16 சதம் சம்பள உயர்வுபோராட்டத்தின் போது கோவிந்தன் பொலிசாரினால் சுட்டுக்கொள்ளப்பட்டார் இவரின் மனைவிக்கு பிரித்தானிய அரசாங்கத்தினால் நட்டஈடு எதுவும் வழங்கப்படவில்லை. இது மலையக பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளில் ஒன்று.

டொனமூர் அரசியல் யாப்பு நடைமுறைக்கு வந்த 1931 ஆம் ஆண்டு சர்வஜன வாக்குரிமை 21 வயதுக்கு மேற்பட்ட ஆண் பெண் இருபாலருக்கும் வழங்கப்பட்டது. ஆனால் மலையகத்தில் உள்ள தமிழர்களுக்கு அந்த உரிமையை முழுமையாக அனுபவிக்க முடியாதுபோனது. பின்னர் தோற்றம் பெற்ற தொழிற்சங்கங்களின் முயற்சியினாலும் அழுத்தங்களினாலும் வாக்குரிமை மலைகத்தவர்களில் அனேக மாணவர்களுக்கு வழங்கப்பட்டபோதும் பொண்கள் வாக்குரிமையை பெறுவதில் சிக்கல்களை எதிர் கொண்டனர்.

அதேபோன்று அக்கால பகுதியில் பல்வேறுப்பட்ட தொழிற்சங்க போரட்டங் களினதும் அழுத்தங்களினாலும் கணிசமான அளவு சம்பள உயர்வுகளை தொழிலாளர்கள் பெற்றனர். ஆனாலும் பெண்களுக்கு அதே அளவு சம்பள உயர்வு வழங்கப்படவில்லை.

இதன் பிறகு பல புதிய தொழிற்சங்கங்கள் தோற்றம் பெற்றன ஆரம்காலத்தில் தொழிற்சங்களாக செயல்பட்ட அமைப்புகளின் மோதல்களின் விளைவாக தொழிற்சங்க தலைவர்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் தேசிய அரசியலில் ஈடுபாடு கொள்ள தொடங்கினார்கள். இதன் காரணமாக தொழிலாளர்களின் நலனில் அக்கறை செலுத்தாது தேசிய அரசியலில் தாம் ஈடுபட்டுக்கொள்வதற்கான கருவியாக தொழிற்சங்கங்களை பயன்படுத்திக் கொண்டனர் எனவே பதவிக்கு வரும் அரசாங்களில் பங்குதாராகும் தொழிற்சங்களும் அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் அமைப்புகளாக மாற்றமடைந்து வருகின்றன.

பெண்களின் அதிகமானவர்கள் இன்று வரவேற்பாளர் பதவிகளையே அமர்ததப்படுகின்றனர் அத்துடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகரங்களில் காணப்படும் ஆடை தொழிற்சாலைகளில் வறுமைகாரணமாக தொழிற்புரிகின்றனர் அண்மையில் மஸ்கெலியா பிரதேசத்தை சேர்ந்த இரண்டு யுவதிகள் பரிதாபமான நிலையில் கொலை செய்யப்பட்டனர். மத்தியகிழக்கு நாடுகளில் பணிபுரிகின்ற பெண்களில் அதிகமானவர் பாலியல் துஷ் பிரயோகங்களுக்கு உள்ளாகின்றனர். தொலைகாட்சி நாடங்களில் வரும் பாத்திரங்ளை பார்த்துவிட்டு வாழ்கையில் பிடிப்பு இல்லாமல் வாழ்வதை நிறுத்தி விட்டு சுயமான தீர்மானங்களை எடுக்க கூடியவர்களாக செயல்படவேண்டிய தேவை முன்னுள்ளதை உணர்ந்து பெண்கள் முன் வரவேண்டும். மலையக பெண்களை தொலைக்காட்சி நாடகங்கள் பெருமளவு பாதிக்கின்றன.

மத்திய கிழக்கு நாடுகளுக்கு அதிமான பெண்கள் தொழில் நிமித்தம் சென்றுள்ளனர் அதே வேளை இவர்கள் இந்த நாட்டின் பிரஜை என்ற வகையில் தேர்தல் காலங்களில் எனைய நாடுகளில் போன்று தபால் மூலம் வாக்களிப்பதற்கான கோரிக்கைகளை முன் வைப்தற்காகவும் பெண்களின் உரிமைகளுக்கு குரல்கொடுப்பதற்காகவும் 75 வீதமாக பெண்கள் அரசியல் தொழிற்சங்கங்களில் ஏதோ ஓர் வகையில் அங்கத்தவராக இருக்கின்றபோதும் இருந்தும் மலையகத்தின் அரசியல் கட்சிகளின் சார்பில் எந்த பெண்ணும் பாரளுமன்றத்துக்கு தெரிவு செய்யப் படவில்லை. அல்லது முன்வரவில்லை எனலாம்.

மலையக பெண்களின் குரல்கள் ஒலிக்கப்படாமைக்கான காரணங்களை கண்டறிந்து பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டும். அதற்கு ஏற்ப மலையக தொழிற்சங்க நடவடிக்கைகளிலும் அரசியலிலும் பெண்கள் பங்கேற்க வேண்டும்.

இன்றைய பாரளுமன்ற உறுப்பினர்களில் 225 பேர்களில் 5 சதவீதமான பெண்களே உறுப்பினர்களாக காணப்படுகின்றனர். இவர்களில் பெருபாலன பெண்கள் தங்களின் கணவனின் அல்லது தந்தையின் மறைவிற்கு பின்பே அரசியல் பிரவேசம் செய்துள்ளனர்.

புதிய செங்கோடி சங்கத்தின் தலைவியாக மேனாகா கந்தசாமி இருந்து வருவதுடன் ஏனைய கீழ்மட்ட அமைப்புகளிலும் பல பதவிகளை பெண்கள் வகித்து வருவது வரவேற்க கூடியது. ஆனாலும் ஒரு சிலரை வைத்துக்கொண்டு முழு பெண்களும் திருப்தியடைந்து விட முடியாது. ஏதிர்காலத்தில் அரசியல் மற்றும் தொழிற்சங்க நடவடிக்கைகளில் மலையக பெண்கள் ஈடுபட்டு பேரம் பேசும் சக்தியாக மாற வேண்டும். மாற்றம் ஒன்றே எந்த விடயத்திலும் முன்னேற்றத்தை கொண்டு வரும் என்பது வரலாறுகள் கற்றுத்தந்த பாடம்.

**வேலு இந்திரச்செல்வன்**
ஆசிரியர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணே

பெண்ணே !
சுகத்தையும் சுமையையும்
ஒரே பார்வையில் நோக்கு
உன் துன்பம் தீரும்
உனக்காக புது யுகம் செய்.
அதில் உனக்கென தனியான
இடத்தை ஏற்படுத்து
உன் கவலைகள் தீரும்.

பெண்ணே!
எதற்காக ஏங்குகின்றாய்.
அவை அனைத்தையும்
உனக்காக ஏற்கும்படி செய்
சூழ்நிலையை பயன்படுத்து!
எண்ணங்களை தூய்மைபடுத்து
உனக்காக ஒரு புதுயுகம்
காத்திருக்கின்றது.

**செ. கோகிலா**
தரம் - 13



# கண்ணீர் சிந்தும் பெண்ணே

**பெண்ணே!**
**உனக்கு என்னடி கவலை - ஏன்**
**கண்ணீர் சிந்துகின்றாய்**
**குடும்பத்தில் குழப்பமா ? - இல்லை**
**குழப்பத்தின் குமுறலா?**

**பெண்ணே!**
**கண்ணீரின் பொருள் என்ன? - உன்**
**கன்னத்தில் வந்த வீக்கம் என்ன ?**
**பதில் கூறு பெண்ணே!**
**பதில் கூறு**

**பெண்ணே!**
**பதில் கூற மனமல்லையோ - உன்**
**பாவப்பட்ட இதயம் துடிக்கின்றதே**
**பொறு பெண்ணே!**
**பொறுக்க முடியவில்லையாயின்**
**பொங்கியெழு!**

**கே. பத்மபிரியன்**
தரம் -8B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகுடம் சூட்டப்பட வேண்டிய மாதர் தினம்

பெண்ணின் பெருமைகளை மட்டுமன்றி அவள் அடைக்கப்பட்டுள்ள சிறைகளில் இருந்தும் வெளிவர வேண்டுமென்று பல தசாப்பங்களுக்கு முன் பாரதி எனும் மகாகவி கூறிய கருத்துக்கள் இன்று வரையில் ஒரு சாராரை உயர்த்தியுள்ளது. பாரதியின் புதிய பெண்ணாக பெண் அடைக்கப்பட்ட சிறையில் ஒரு சில வேலிகளை உடைத்தெறிந்து விட்டு உயர்த்த மத்தியவர்க்கப் பெண்கள் வெளியில் வந்திருந்தாலும் இன்னும் கீழ் நிலையில் மட்டத்தில் பெண்கள் இதற்கு விதிவிலக்காக இருக்கின்றமை பெரும் கவலையும் தருகின்றதோடு பெண்ணினம் இன்னும் முழு விடுதலை காணவில்லையென்பதையேயாகும்.

இன்று உலகம் பூராகவும் உலக மகளிர் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவர்கள் என்ற உண்மை புலப்படுகின்றது இந்நாளின் புனிதத்தை அறியாத மாதர் குழமும் உண்டு இப்புனிதநாளை உலகளாகிய ரீதியில் எல்லா மாதர்களும் கௌரவிக்கப்பட வேண்டும் இத்தினத்தை குறிப்பிட்ட ஒரு பெண் சமூகத்தினர் என்று மட்டும் கொண்டாடாமல் எல்லா மாதரும் அந்நாளின் மகிமையை அனுபவித்து உலகிற்கு பெண்ணின் பெருமையை எடுத்துக்காட்ட வேண்டும்.

இன்று வேகமாக சுழலுகின்ற உலகத்திலே பெண்ணவளும் பம்பரம் போல சுழலுவதும். அடுப்படியே தஞ்சம் என்று முடக்கப்படுகின்ற பெண்கள் மன விரக்தியும், கசப்பும், அடைந்தும் பெண் இனத்திற்கே உரித்தான தன்மையை மறந்து நிலைமாறி வாழ்கின்றனர் தாங்கள் பெண்கள் என்ற ஒரே காரணத்தினால் பெரும் சிரமங்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். வறுமை, நிர்ப்பந்தங்கள், சூழ்நிலைகள், ஆணாதிக்க சமூகம் பெண் என்றதொரு காரணத்தாலும் எமது பெண்களை சுற்றி சங்கிலிகள் இருக்கப்பட்டுக்கொண்டே உள்ளன.

இன்னும் சிலர் திருமணத்தை எட்டும் போது சீதனம் எனும் சுமைகளால் உதாசீனம் செய்யப்படுவதும் திருமண பந்தத்துக்குள் நுழைந்துவிட்ட பெண்களில் வாழ்வில் சிக்கல்கள் தோன்றும்போது நாம் ஏன் பெண்ணாய் பிறந்தோம்? என்றதொரு கவலையோடு பெண்தான் தான் தன் இனத்தையே வெறுக்க வேண்டிய துர்பாக்கிய நிலைக்கு உள்தள்ளப்படுகின்றாள். இச்செயல் மாதர் குலத்தின் அழகிய எழில் மிகுந்த வாழ்க்கையை எவ்வாறு சீர்குழைக்கின்றது?

இம்மண்ணிலே பிறந்த எந்தவொரு பெண்ணும் மாண்பு மிக்கவள் பெண்மை அவளை இழிவாக நடத்தும் சமுதாயம் இருக்குமானால் அவ் நிச்சயம் ஒளி பெறபோவதில்லை. நானும் அழிந்து தன் சமுதாயத்தை அழிக்கும் வர்க்கமாகவே மாறும். மாறாக எச்சமுதாய பெண்ணை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணாகவும் பண்புள்ளவலாகவும், தெய்வமாகவும் மதிக்கின்றதோ அச்சமுதாயம் எல்லாவற்றிலும் எழுச்சியும், மேண்மையும் காணும். பெண்ணவளை இழிவு நிலைக்கு உற்படுத்தும் இச்சமுதாயம் விழிப்புணர்வு பெறவேண்டும். பெண்கள் மீது கரிசனை காட்ட வேண்டும், அவளை அன்போடும் பண்போடும் நடத்தவேண்டும். பெண்ணுக்கு பெண்ணே எதிராக நின்று போர் புரிவதும் பெண்மை அவளை வீழ்த்துவதும் மடத்தனமாகும். பெண் என்பவள் சாதிக்க பிறந்தவள் அவள் புகழால் விண்ணை அளக்க பிறந்தவள் ஆனால் பெண்கள் பல்வேறுபட்ட சவால்களுக்கும் சோதனைகளுக்கும் மத்தியில் சிக்கி தவிக்கிறாள்.

என்னவளின் பிரச்சனைக்கு தீர்வு கண்டு அவளின் குறைகளை பெரிதுபடுத்தாமல், அவளுக்குள் இருக்கும் நல்லவற்றை கண்டுணர்ந்து இச்சமுதாயம் மதிக்குமானால் அது முழு உலகையுமே வெற்றி பாதையிலும் அபிவிருத்திக்கும் வழிவகுக்கும் ஐயமில்லை.

பெண் என்பவள் தான் வாழ்க்கையில் எத்தனையோ விதங்களில் மாற்றி அமைத்து அர்ப்பணம் அளிக்கின்றாள். மகளாக பிறந்து, மனைவியாகி, தாயாகி, மாமியார் என்ற அந்தஸ்துக்கு பொருகின்ற பெண்கள் கல்வி கற்று தொழிலிலே உயர்பதவிகளை வகிக்கும் பெண்கள் ஆண்மீகத்திலே நிலைத்திருந்து அதிலே ஆழம் கண்ட அன்னை சாரதா தேவியார், அன்னை திரேசா போன்றோரும் பெண்களே தாழ் நிலையிலிருந்து உலக புகழ் பெறும் உயர் நிலையை எட்டிபிடித்த பெண்கள் பலர்.

இவற்றிலிருந்து பலப்படுவது என்னவெனில் பெண் என்பவள் பல்வேறு சக்தி நிறைந்த பெண்ணாக இருக்கின்றாள். ஆகவே அவளின் சக்தியை கண்டறிந்து அவளை ஊக்கப்படுத்துவதால் அவள் குடும்பத்திற்கும், முழு சமுதாயத்திற்கும் தன் நல்லண்பை பொழிந்து பேணி காப்பாள். இப்படிப்பட்ட பொண்ணான மகளிர் தினத்தை நாம் இனிமேலும் வீணாக்காமல் எல்லா மகளீரும் அந்நாளை முழுமையாக அனுபவிக்க அர்த்தமுள்ளதாக கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளை செய்வோம்.

**நாம் வாழ நல்ல பெண்**

**சமுதாயத்தை அமைப்போம்**

என்ற கருத்தொடு பெண்மையவளை மதிப்போம் கௌரவிப்போம்.

**க. யசோப்பிரியா**
க.பொ.த. உயர்தரம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகத்தில் உழைக்கும் பெண்களின் அரசியல் தலைமைத்துவம் எப்போது?...

இன்று உலக சனத்தொகையில் அரைவாசிக்குமேல் பெண்கள் வாழுகின்றார்கள் அவர்களில் குடும்பத்தில் தலைமைத்துவ வகிபாகத்தில் எத்தனைபேர் வகிக்கின்றார்கள் சமூகத்தில் மற்றும் நாட்டு அரசியலில் உயர் பதவிகளில் இருக்கிறார்கள். என்பதை பார்க்கும்போது அளவுரீதியாகவோ பதவி ரீதியாகவோ குறிப்பிட்ட அளவில் இருக்கிறார்கள். மலையக மக்களை பொருத்தவரையில் 10 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வாழ்கிறார்கள். அவர்களில் 5 லட்சத்திற்கு மேல் பெண்களாக இருக்கிறார்கள் இவர்களில் தலைமைத்துவ வளர்ச்சியில் ஆசிரியையாகவும், தாதிகளாகவும், கிராம சேவையாளர்களாகவும், சமூர்த்தி உத்தியோகத்தர்களாகவும், வைத்தியர்களாகவும், விரிவுரை யாளர்களாகவும் மற்றும் அரச தொழில் சார்ந்த பதவி வகிக்கின்றார்கள். அவர்களை பாராட்ட வேண்டியதும் போற்ற வேண்டியதும் அவசியமானதாகும்.

இலங்கையில் சுதந்திரத்தின் பின் அரசியல் தலைமைத்துவத்தில் பெண்களின் பங்கு மாகணசபை, பாராளுமனறம் ரீதியல் மலையக மக்களில் உழைக்கும் வர்க்கத்தை சார்ந்த பெண்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள். என்றால் இல்லை என்றே கூறவேண்டியுள்ளது. இது வருந்தக்கவிடயமாகும். மலையக மக்களில் பாதுகாவலன் என்று கூறும் அரசியல் கட்சிகள், மற்றும் தொழிற்சங்கங்கள் சார்பாக பெண்கள் தலைமைத்துவத்தை ஏற்படுத்தி வைத்தாலும் கூட பெருந்தோட்ட மக்களின் பிரச்சினைகளையோ? அல்லது மக்கள் விழிப்புணர்வையோ தூண்டக் கூடியவர்களாக இருந்திருக்கிறார்களா? இல்லை.

மலையக அரசியல் கட்சிகளின் தலைவர்களின் நெருங்கிய உறவினர்களே அரசியலில் தலைவிகளாக அரசியலில் பிரவேசிக்கினறனர். இது மலையக மக்களின் வாழ்வில் விடிவைத் தருமா என்பது சந்தேகமே? கடந்த கால தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் அரசியலில் பிரவேசித்த மலையக முதல் பெண் அங்கத்தவர் யார்? என்பதை மலையக பெண்களில் அநேகர் அறிவார்களா? அந்த உறுப்பினர் மலையக மக்களின் பெண்களின் வளர்ச்சிக்கு எதை செய்தார் மாறாக மலையக மக்களின் பெண்களுக்காக குரல் கொடுத்தாரா? இல்லை. இப்படி இருக்கையில் மலையக மக்களின் உழைக்கும் வர்க்கத்திலிருந்து அரசியலில் பிரவேசிக்க வேண்டிய தேவை உள்ளது. என்பதை மலையகத்தை வாழ்விடங்களாக கொண்ட பெண்கள் கட்டாயம் புரிந்து கொள்வது அவசியமாகும்.

உலக பெண்களின் உயர் அந்தஸ்திலிருந்து பெண்களை பொருத்தவரையில் 1950களின் பின் பெண்களை பொருத்தவரையில் பலர் இருக்கிறார்கள்

உலக தலைவர் வரிசையில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரத்துங்க அவர்கள் இலங்கைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| நாடு | பதவி | தலைவிகள் |
|---|---|---|
| அமெரிக்கா | வெளிவிவகாரம் | திருமதி கொண்டலீசா ரைஸ் |
| பிரித்தானியா | பிரதமர் | திருமதி மாகிரட் தட்சர் (இரும்பு சீமாட்டி) |
| ஜேர்மனி | அதிபர் | திருமதி அஞ்சலாமேகர் |
| இந்தியா | பிரதமர் | திருமதி இந்திராகாந்தி |
| பாகிஸ்த்தான் | பிரதமர் | திருமதி பெனாசிர்புட்டோ |
| பங்களாதேஷ் | பிரதமர் | திருமதி காலிதாஷியா |
| பங்களாதேஷ் | பிரதமர் | திருமதி ஷேஷ்ஹ் ஹசீனா |
| பிலிப்பைன்ஸ் | பிரதமர் | திருமதி கொரசினோ அக்கினோ |
| இலங்கை | உலகின் முதல் பெண் பிரதமர் | திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க |
| இலங்கை | முதல் பெண் ஜனாதிபதி | திருமதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரத்துங்க |

பெண்களின் கல்வி வளர்ச்சியில் மற்றும் மகளிர் அமைச்சு ஏற்படுத்தியமை பலப்படுத்தியமை பாராட்டத்தக்கதாகும். தென்னாசிய நாடுகளில் பெண்ணின் கல்வி நிலை இலங்கை முதல் நாடாக மாற வழி அமைத்தவராவர். மற்றும் அதற்கு சான்றாக கல்வி அமைச்சின் செயலாளராக திருமதி தாரா டி மேல் உயர் பதவி வகித்ததை குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் பெரும்பான்மை சமூக அமைப்பில் பெண்களின் நிலை படிப்படியாக வளர்ந்துவரும் போதிலும் மலையக மக்களின் வாழ்க்கையின் பாராளமன்ற பிரவேசத்தில் பெருந்தோட்ட உழைக்கும் வர்க்க பெண்கள் கட்டாயம் ஈடுபடவேண்டும்?

**எல். இராமச்சந்திரன்** BA (dip in edu)
ஆசிரியர்



**திருமதி. இந்திராகாந்தி**
இந்திய பிரதமர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணே விழித்திரு

பெண்ணே! வாழ்க்கை ஒரு
போராட்டம் அதில் நீயும் போராடு

பெண்ணே! வாழ்க்கை ஒரு சவால்
அதை நீயும் எதிர் கொள்

உன் பெருமை இவ்
வையகம் முழுவதும் வந்திதிக்கும்
ஒரு கண பொழுதில்

பெண்ணென்பவளே பொறுமையின்
சிகரம் அவள் இல்லை - என்றாலே
இவ்வுலகம் வெறுமையே
சாதனைகள் பல செய்து
வேதனைகள் பல பொருத்து
இன்பத்தின் விழிப்பாய்
துன்பத்தின் முடிவாய்
இருப்பவள் பெண்ணே!

இத்தரணியின் அவள் புகழ்
பெற கொடுத்திடுவோம் முன்னுரிமை
அதை எண்ணிக்கொண்டே
நாம் ஒவ்வொருவரும்
தினம் தினம்படுவோம் பெருமை
தித்திக்கும் தேன்சிட்டாம்
இப்பார் முழுதும் பரவும்
உன் பெருமை

பெண்களுக்கு வேண்டாம் வேற்றுமை
அவளை இணைத்து செய்வோம் ஒற்றுமை
கட்டியெழுப்புவோம் புதியதோர் நாட்டினை
அது எம் பெண்களுக்கோர் படிப்பினை
பசுமை நிறைந்த பண் நாட்டினிலே

பல்லாயிரம் கோடி வார்த்தைகள்
பெண்ணின் பெருமையை
மலர்போல தூவ

பெண்ணே! முயற்சி என்னும்
தீபமேற்றி முன்னேறுவோம்
இந்நாட்டில்

**சுபாஷினி**
தரம் 12





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூடைக்கு வேலை குறைந்திடும்

பெண்ணாய் பிறந்தவரெல்லாம்
மண்ணாய் போய்விடும் - என்ற
மடைச்சாமி கூற்று
மண்ணோடு மண்ணாய்
மாய்ந்த காலம் - இது

பெண்கள் - இன்று
மண்ணில் சாதனை
விண்ணில் சாதனை
மலைப்பெண்ணே - நீ
எதில் சாதனை

தேயிலை சாற்றில் - உன்
உதிரம் சரித்திரமானது - உன்
விரல்களின் வெடிப்புகள்
உழைப்பின்
உயர்வை படம் பிடிக்கும்

பெண்ணே போதும்
உன் மௌனம் - உன்
வேதனை தீர்ந்திட
வேலை தன்னை மாற்றிடு
கல்வியில் உயர்ந்திடு
அரசியலில் புகுந்திடு
உயர் மட்ட எண்ணத்தை
ஓடி நாடிடு
கூடைக்கு வேலை குறைந்திடும்

**திருமதி கோகிலா சந்திரகுமார்**
ஆசிரியை

# துளிகள்

ஒன்று என்பது
வாழ்க்கையின் **ஆரம்பம்**

காலங்களின் கோலம்
**வாழ்க்கை**

பெண்ணின் மணிமகுடம்
**தாய்மை**

**திருமணம்!**
பெண்களின் சிறைக்கூடம்

திருமணத்தின் விலை
**சீதனம்**

வேதனையின் ஊற்று
**கண்ணீர்**

பெண்ணின் பொறுமை
**தென்றல்**

உள்ளம் நிறைந்த வருகை
**உறவு**

**செல்வி. அ. நிர்மலாஜோதி**
(ஆசிரியை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலையின் ஒளி...!

பெண்ணே - நீ
பேசும் தெய்வமா ? - இல்லை
பேதை மனதை
புரியவைக்க வந்த சின்னமா ?
இப்பூமியில நீ ஏன் வந்தாய்
பாழடைந்த இப்பூமியை
பசுமையாக மாற்றுவதற்காகவா?

பெண்ணே நீ
படும் பாட்டை யாரறிவார்
உன்னதமான சமூகமா ? - இல்லை
உயிர்களை சுமக்கும் உலகமா ?
-அன்று
எனக்கே தெரியவில்லை - இன்று
உனக்கோ புரியவில்லை
தெய்வத்தை கண்டோம் கண்ணில் -
அதன்
உண்மையை அறிந்தோம் பெண்ணில்

பிறந்தாய் குழந்தையாய்
வளர்ந்தாய் குமரியாய் - பின்
ஆனாய் தாயாய்
பெண்ணே, உன்னை எப்படி அழைக்க
ஒன்றா? இரண்டா?
ஓராயிரம் பெயர்கள் உனக்காக

உன் பெறுமைகள் கோடி கோடி
அதை யாவரும் தேடி தேடி
கற்போம் இந்நாளிலே
கலையின் ஒளி வீதிலே.



ம. சந்திரசிவா
தரம் 11A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# என் அன்னைக்கு

ஈரைந்து மாதங்கள்
கருவோடு வலிதாங்கி
மறு பிறப்பெடுத்து
என்னை பெற்றெடுத்த
நாள் முதலாய்
ஊண் மறந்து, உறக்கம் மறந்து
கண்ணுக்குள் வைத்து காத்தாயே

என் ஒவ்வொரு அசைவிலும்
வளர்ச்சியிலும் மகிழ்ந்தாய்!
என் ஆசைகளை நிறைவேற்றி
உன் ஆசைகளை
நிராசையாக்கிக் கொண்டாயே!

ஒவ்வொரு காரியமும் சொல்லி செய்து
சொல்லாமல் உயிர் நீத்தாயே
உன் கோபம் நியாயமானதுதான்.
அப்போது விளங்கவில்லை
இப்போது புரிகின்றது.

திருமதி மணிமேகலை லோகேஸ்வரன்
ஆசிரியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண் விடுதலை

பெண்கள் விடுதலை பெற்ற மகிழ்ச்சிகள்
பேசிக் களிப்போடு நாம் பாடக்
கண்களி லேயொளி போல வுயிரில்
கலந்தொளிர் தெய்வம் நற் காப்பாமே

என்பது பாரதியின் காப்பு பெண்கள் விடுதலை பெற வேண்டும் என்ற குரல் இன்று பாரினிலே எல்லா பாகங்களிலும் ஒலித்து வருகிறது. சமுதாய முன்னேற்றத்திலும் நலனிலும் அக்கரையுள்ள அரசியலாளர்களே, கவிஞர்கள், மாதரியக்க முன்னோடிகள் அனைவரும் இன்று இதனையே குரல் கொடுக்கின்றனர். புதிய சமுதாயத்தை உருவாக்கும் நோக்குடன் போராடிக் கொண்டிருக்கும் விடுதலை அமைப்புக்கள் அனைத்தும் பெண் விடுத்லையை பிரதான குறிக்கோள்களில் ஒன்றாக கொண்டுள்ளன.

மனு தர்ம சாஸ்திரம் கூட ஒரு பெண் சிறுவயதில் தந்தைக்கும், திருமணத்தின் பின் கணவனுக்கும், முதுமையில் தன் மகனுக்கும் கட்டுப்பட்டவள் என்று அடிமை சாசனம் எழுதி வைத்தது.

ஆளும் வர்க்கம் அறிவியல், மத, கலை, கலாசாரங்களுக்கூடாக ஊட்டிய இக்கருத்துக்கள் அடிமைத்தனத்திலும், ஏழ்மையிலும், அறியாமையிலும் மூழ்கியிருந்த அன்றைய ஆண்களும், பெண்களும் ஏற்று நடந்தனர். ஆளும் வர்க்கத்தினர் வாழ்ந்த வாழ்வும் வாழ்க்கை முறையும் அவர்களது வாழ்வுக்கு இலக்கணமானது. நவயுகக் கவிஞனும் அதிகமானமான பாரதியார் தனது பெண் விடுதலை கும்மியில் பின்வருமாறு கூறுகிறார்.

**"ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென் றெண்ணி யிருந்தவர் மாய்ந்து விட்டர் வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போமென்ற விந்தை மனிதர் தலைக்கவிழ்ந்தார்."**

தவறான பழமைக்கருத்துக்களில் இருந்து முற்றாக விடுபடாத எமது சமூகத்தில் பெண் விடுதலைக்கு குரல் கொடுத்தார் நவயுகக் கவிஞர் பாரதி.

உயிரியல், உளவியல், உடற் கூற்றுக்காரணங்கள் எதைக்கூறினாலும் இரத்தமும், சதையும் உடலும், உயிரும், உணர்வும் ஒர் மானிட உயிர் என்ற வகையில் பெண் சுதந்திரமானவள் ஒடுக்கப்படும் பெண்களுக்கு ஒடுக்குதலுக்கும் எதிராகப் போராடும் உரிமை உண்டு. பெண்கள் தமது விடுதலைக்கு தாமே போராட வேண்டும்.

பெண் விடுதலை என்பது சமூக விடுதலையின் ஒரு பகுதி என்ற வகையில் பெண்கள் தமது விடுதலைக்கான போராட்டங்களை முன்னெடுக்கும் அதே வேளை ஒடுக்கு முறைகளுக்கு எதிரான ஏனைய போராட்டங்களுடனும் தம்மை இணைத்துக்கொள்ள வேண்டும். பகுதியும் முழுமையும் இணையும் இத்தகைய போராட்டங்களினால்தான் முற்று முழுதான சமூக விடுதலையை விரைவுபடுத்த முடியும்.

19ம் நூற்றாண்டின் பின்னர் நடந்த பல்வேறு விடுதலைப் போராட்டங்களிலும் பெண் விடுதலைக்கான குரல்கள் எழுந்தன ரூஷ்யப்புரட்சி, சீனப்புரடசி, கொரியா வியட்நாம், கம்போடிய மற்றும் தென்னமெரிக்கா விடுதலைப் போராட்ட காலத்தில் பாரதியின் பெண்விடுதலைக்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறைக்கூவல் தமிழர்களின் மத்தியில் மட்டுமல்ல இந்தியாவெங்கும் ஒலித்தது. ஆனால் பெண் விடுதலையை உறுதியான கொள்கையாக ஏற்காத இந்தியா போன்ற நாடுகளின் வெறும் போர்க்கால சமத்துவ குரலாக அது நலிந்து ஒடுங்கியுள்ளது. போரென்பது ஆயுதத்தை மட்டுமன்றி மனித வள தேவையையும் அடிப்படையாகக்கொண்டது, இந்தக் வகையில் மக்கள் தொகையில் பாதி பேர்களான பெண்களும் ஆயுதம் ஏந்துவது வரலாற்றில் புதியதல்ல.

பல்லாயிரம் ஆண்டுகாலம் நாம் அமிழ்ந்துக் கிடந்த சேற்றுக்குள் இன்னும் இருந்துக்கொண்டு சிந்திக்கும்போது இவைகள் கனவுகளாகலாம். இன்றைய கணனி யுகத்தில் மனித பதிலிகளையும் பரிசோதனை குளாய் குழந்தைகளையும் உருவாக்கிவிட்ட காலம் இது. மனித குலம் வளர்நது வருகின்றது. வரலாற்றில் என்றமே என்றுமே இல்லாத அளவிற்கு மக்கள் சுதந்திரத்தை உணர்ந்த வருகின்றார்கள் ஒடுக்கு முறைகளை இனங் காண்கின்றார்கள், விழிப்படைகின்றார்கள். இது வர்க்க விடுதலை, தேசிய இன விடுதலை, தேச விடுதலை என்ற பல முனைகளில் இன்று வெளிப்படுகின்றது. இவைகளில் பெண்களின் பங்கு இணைவதால் பெண் விடுதலையும் இவைகளால் உந்தித் தள்ளப்படுகின்றது. வளரும் இவ்விடுதலை உணர்வுகள் மக்கள் நலன் சார்ந்து இருந்ததால் வரலாறு முன்னே பாயும் ஏகாதி பத்தியங்கள் வழிக்காட்டலுக்குறப்பட்டால் சிறிது வேகம் தணியும் ஆனால் வரலாறு என்றும் முன்னோக்கியே செல்லும்.

இன்று உலகெங்கு நடைபெறும் விடுதலை போராட்டங்கள் அனைத்திலும் பெண்கள் பெரும்பங்கு வகிக்கின்றனர். எமது நாட்டில் 1966 ஆம் ஆண்டில் வடப்பகுதியில் தீண்டாமை ஒழிப்பு, வெகுஜன இயக்க போராட்டங்களிலும் 1971 ஆம் ஆண்டில் தென்பகுதியில் ஜே.வி.பி இயக்க நடவடிக்கைகளிலும் பெண்கள் பங்கு கொண்டனர் 1983 இல் இருந்து கூர்மையடைந்துள்ள தமிழ் தேசிய இன விடுதலை போராட்டத்தில் பெண்கள் பெரும் எண்ணிக்கையில் பங்கு கொண்டு வருகின்றனர். சமுகத்தில் இன்று நிலவும் பெண் ஒடுக்கு முறையின் தோன்றலே பெருந்தொகையான இளம் பெண்கள் இவ்விடுதலை போராட்டத்தில் பங்கபற்றுவதற்கான காரணமாகும். பெண்கள் ஆயுதம் ஏந்தி போர்முனைகளில் நிற்பதோடு மட்டும் நின்றுவிடாமல் பெண்விடுதலை ஓர் உறுதியான கொள்கையாக ஏற்று செயற்படுவதன் மூலமே ஒரு புதிய சமூகம் மாறுதலை ஏற்படுத்த முடியும். சமகாலத்தில் வரலாற்று ரீதியாக மலையக பெண்களின் விடுதலையை நோக்குவோம்.

**எங்கள் மலையகம்**
**அமைதியில் ஆழ்ந்துக்கிடக்கின்றது**
**"உறங்கும் எரிமலையாக"**
**நிரந்தர அமாவாசையில் அர்ச்சிக்கப்பட்ட**
**மலையக பௌர்ணமி சந்திரனால்**
**முழ்கடிக்கும்போது**
**சிவப்பு சாயங்கள் சீறிப்பாய - உன்**
**நிரந்த தோல்விகள் எழுச்சி**
**வேள்வியில் எரியாதா?**

என்று மலையகத்தின் நிலையை இளங் கவிஞரும் ஆசிரிருமானதிரு. பன்னீர்செல்வம் அவர்கள் "குன்றத்து குமுறல்" என்ற நூலின் மூலம் கூறியிருக்கின்றார். மீனாட்சி அம்மையார் மலையக நாட்டார்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல்களின் மூலமாக மலையக பெண்கள் தொழிற்சங்க இயக்கங்களிலும், அரசியல் போராட்ட இயக்கங்களிலும் ஈர்த்துக்கொள்வதற்காக தேச பக்தர் கோ. நடேசய்யர் இணைந்து 19ஆம் நூற்றண்டில் பணியாற்றியிருக்கின்றார் அதனைத்தொடர்ந்து மலையக பெண்கள் அரசியல் தொழிற்சங்க பணிகளில் பங்கெடுத்துக் கொண்ட போதிலும் இன்றைய மலையக பெண்கள் முழுமையான சமூக விடுதலையை பெற்றிருக்கின்றார்கள் என்று கூற இயலாது சாதாரணமாக தேர்தல் கலங்களில் தான் விரும்புகின்ற வேட்பாளர்களுக்கு வாக்களிக்க கூட சுதந்திரமில்லை தனது குடும்பத்தை சார்ந்த ஆண் உறுப்பினர்கள் குறிப்பிடுகின்ற வர்களுக்கு வாக்களிக்கும் நிலைமை காணப்படுகின்றது இவ்வாறு பெருந்தோட்ட பகுதிகளில் வேலைசெய்கின்ற பெண் தொழிலாளர்கள் காணப்பட்டாலும் இவர்களுக்குள்ளிருந்து இவர்களுடைய பிரச்சனைகளை பேசக்கூடிய வகையிலான எந்தவொரு பெண்ணும் பாராளுமன்றத்தில் இல்லை விகிதாசார ரீதியில் நோக்குகையில் ஏனைய அமைப்புக்களிலும் உயர் பதவிகள் பெண்களுக்கு வழங்கப்படுவதில்லை. இலங்கையில் பெண் ஜனாபதியாக இருந்தார், பெண் பிரதமராக இருந்தார், இந்திய் பெண்மனி கல்பனா சாவ்லா விண்வெளிக்கு சென்றார். உலகின் பலம்பொருந்திய பதவியான அமெரிக்க முன்னால் வெளிவிவகார செயலாளராக கொண்டலிசா ரைஸ் இருந்தார். தற்போதைய வெளிவிவகார செயலாளராக கௌரவ திருமதி ஹிலரி கிளின்டன் அவர்கள் இருக்கின்றார் ஆனாலும் இவர்களை உதாரணமாக வைத்துக்கொண்டு பெண்களுக்கு விடுதலை கிடைத்து விட்டது. உரிமைகள் வழங்கப்பட்டிருக்கின்றது என்று பேசிக்கொள்ள முடியாது மலையகப் பெண்கள் திருப்திபடக்கூடிய அளவிற்கு மாற்றங்கள் எதுவும் நடந்துவிடவில்லை. இந்த நிலைமையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டியது இன்றைய கல்விச் சமுகத்தின் மிகப்பெரிய பணியாகும்.

பெண் விடுதலையும் சமூக விடுதலையும் ஒன்றையொன்று சார்ந்தது பல்லாயிரம் ஆண்டின் பழைய சிந்தனையின் வெளிப்பாடான பெண் ஒடுக்குமுறை ஒரு சமூக புரட்சியினாலும் இதனைத்தொடந்து பல பண்பாட்டு புரட்சிகள் மூலமே முற்று முழுதாக மாற்றப்பட முடியும் அது போன்றே மக்கள் தொகையில் அரைவாசிகும் அதிகமான பெண்களின் விழிப்புணர்வு அவர்களின் பங்குபற்றுதலில் அனைத்து ஒடுக்கு முறைகளையும் தகர்க்கும். சமுகப்புரட்சி சாத்தியமாகாது எமது நாட்டின் சமுகத்தின் அடிப்படை அழகான குடும்பங்கள் சுதந்திரத்தின் அடிப்படையில் உருவாகும் போதே ஏனைய சுதந்திரங்களும் நின்று நிலைக்கும் ஒருவரது சுதந்திரத்தை ஒரு வர் மதித்து ஒன்றுபடவேண்டும் பெண் விடுதலையை வென்றெடுக்க வேண்டும்.

**திருமதி லலிதா நாகராஜன்**
**ஆசிரியை**
மமா/வ/ரிலாமுல்ல த. ம. வி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியலில் பெண்கள் சாதித்துள்ளார்களா

ஆண்டாண்டு காலமாய் பெண்கள் பல்வேறு அடக்கு முறைக்கு உட்பட்டுள்ளனர். சற்று பெண்களின் நிலையை உற்று நோக்குவோமானால், வீட்டில் கணவன் சாப்பிட்ட தட்டிலே தான் மனைவியும் சாப்பிட வேண்டும், பின் தூங்கி முன்னெழ வேண்டும். ஆரம்ப காலம் தொட்டு நாம் தாய்வழிக் கோட்பாட்டில் வழிவழியாய் வந்துள்ளோம். நாட்டை குறிப்பிடும் போதும் தாய் நாடு என்று தான் கூறுவார்களே அன்றி தந்தை நாடு என்று கூறுவதில்லை இவ்வாறு குடும்ப அமைப்பிலே அரசியல் காணப்படுகின்றபோது நாட்டின் அரசியலிலும் பெண்கள் தன்னை நிலை நாட்டியுள்ளனர்.

சற்று உற்று நோக்குவோமானால். உலகின் முதல் பெண் பிரதமராக முடிசூட்டிக்கொண்ட நம் நாட்டின் திருமதி. ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க அவர்களும், அவரின் மகளான திருமதி. சந்திரிகா பண்டாரநாயக்க குமாரத்துங்க அவர்களையும் கூறலாம். திருமதி. சந்திரிகா பண்டாரநாயக்க அவர்கள் உலகின் முதல் பெண் ஜனாதிபதியாகவும் அரசியலில் பல்வேறு சாதனை புரிந்துள்ள பெண்மணியாகவும் திகழ்கின்றார் அது மட்டுமன்றி செல்வி. ஜெயலலிதா, இந்திராகாந்தி, தற்போதைய இந்திய ஜனாதிபதி பிரதீபா பாட்டில் அவர்களும், தங்களது அரசியல் வாழ்க்கையில் சிறப்பு பெற்று இருக்கின்றனர்.

இன்னும் ஆராய்ந்தால் பெனாசீர் பூட்டோ, இங்கிலாந்தின் எலிசபெத் மகாராணி, அமெரிக்காவின் இரும்ப பெண்மணி என போற்றப்படும் கொண்டலீசா ரைஸ், அண்மையில் அமெரிக்காவில் நடந்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட, தற்போதைய வெளிவிவகார அமைச்சருமான ஹிலரி கிளின்டன், இந்தனேசியாவில் ஜனாதிபதியாக கடையாற்றிய மேகவதி சுகர்னோ புத்திரியும் அரசியலில் சாதனை படைத்துள்ளனர். அரசியலில் மட்டுமா ? "கல்பனா சாவ்லா" இப் பெயர் ஞாபகம் இருக்கின்றதா விண்வெளி வீராங்கனையாய் தன்னுடைய பெயரை நிலை நிறுத்தியிருக்கின்றார். இந்த மகத்தான வேளையில் அன்னை தெரேசாவையும், விளக்கேந்திய சீமாட்டி என பெயர் பெற்ற புளோரன்ஸ் நைட்டிங்கேல் இவர்களும் குறிப்பிடத்தக்கவர்கள்.

இவ்வாறு ஒரு பக்கம் பெண்கள் தலைத்துவமிக்க, தைரியமிக்க பெண்களாக சாதித்துக்கொண்டு வந்தாலும், மறுபக்கம் பார்த்தோமானால் பெண்கள் நிலை மிக மோசமானதாக புலப்படுகின்றது கிராம புறங்களிலும், நகர்புறங்களிலும் பாலியல் வன்முறை, சீதனக் கொடுமை, சிறுவயதிலே வேலைக்குச் செல்லுதல், அடிமைத்தனம் போன்ற செயல்களுக்கு, கெடுரத்தனத்திற்கு பெண்கள் தன்னை பலியிட்டுக்கொள்கின்றனர். திருமணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடித்தும் பெண்கள் பிரச்சனைக் குட்படுகின்றனர். சந்தேகம் எனும் கொடிய விஷமுள்ள அரக்கர்களிடம் சிக்கி அவர்கள் படும்பாடு அம்மம்மா சொல்லில் அடங்காது.

இவ்வாறான பிரச்சினைக்கு அடித்தளம், பொருளாதாரம், வறுமை, காரணமாக பெண்கள் வெளிநாடு செல்வதும், நகர்புறங்களை நோக்கி இடம்பெயர்வதும், இடையிலே கல்வியை நிறுத்தி ஆடைத் தொழிற் சாலைக்கு வேலைக்கு செல்வதும் தவிர்க்க முடியாதுள்ளது. எனவே இவ்வாறான சந்தர்ப்பங்களில் பல்வேறு பிரச்சனைகளுக்கு பெண்கள் முகங்கொடுக்க நேரிடுகின்றது. ஏன் தாங்களின் உயிர்களைக் கூட இழக்க நேரிடுகின்றது. இதற்கு சான்றாக அண்மையில் மஸ்கெலியா பிரதேசத்தை சேர்ந்த இரு யுவதிகளின் மரமமான மரணத்தை குறிப்பிடலாம். வறுமையின் காரணமாக நகர்புறத்திலே வீடொன்றில் பணியாளாக வேலைக்கமர்ந்த இவ்விரு யுவதிகளும் எவ்வித காணங்களும் இன்றி மரணமானது, காரணமாகும். இதற்கெல்லாம் காரணம் வறுமை குடும் தலைவராக ஆண்கள் இருந்த காலம் மாறி பெண்களும் பொருளாதாரத்தில் தன் பங்கினை செலுத்தினாலும் பெண் உரிமை அங்கு மறுக்கப்படுகின்றது.

ஆடை அணியும் விதம், தலைமைத்துவம் என்கின்ற போது அங்கு பெண் உரிமை மறுக்கப்படுகின்றது. கிணற்றுத் தவளைபோல் கிணற்றுக் குள்ளேயே பெண்கள் இருந்தகாலம் மாறினாலும் நூற்றுக்கு பத்து சதவீதமாகவே உள்ளது.

**ஆணும், பெண்ணும் நிகரெனக் கொள்வதால் அறிவிலோங்கியல் வையந்தலைக்குமாம்**
**(பாரதி)**

என பெண்களை போற்றி பாரதி என்ற ஆண் கவிஞனே பாடியுள்ளான். பெண்ணடிமைத் தனத்தை பாடிய பெண் கவிஞர்களை உற்றுநோக்குவோமானால் விரல் விட்டு எண்ணக்கூடிய ஒருவரும் இலர்.

ஏலவே பெண்களாகிய நாம் கவிஞராக, தலைவராக அரசியல் வாதியாக மாற யார் தடை! பெண்கள் தான்! ஆம் வெட்கம், பயம் போன்ற குணங்கள் தான் இத்தடைகளை உடைத்தெறிந்து பதுமைப்பெண்களாய் மாறுவோம்.

மேலே கூறிய அரசியல் பெண்மணிகள் போல் இன்னும் பல பெண்கள் உறுவாக வேண்டும். பெண்ணடிமை பெண்களின் அவல நிலைமை இந்த பார் முழுதும் கோரிக்கையாய் முன்வைக்க பெண்கள் முன்வருவார்களா? தங்களது தடைகளை தகர்த்தெறிந்து உரிமைகள் பெற பெண்கள் முன்வருவார்களா?

**திருமதி. யோகினி சுரேஸ்**
ஆசிரியை
மமா/வ/ரிலாமுல்ல த. ம. வி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைய மகளிரும் இன்றைய கால மகளிரும்

பாரம்பரியம், பண்பாடு, கலாசாரம் போன்றவற்றின் காரணமாக பண்டைய பெண்கள் வீடு, அடுப்பங்கறை, மற்றும் பிள்ளைகள் என்று தமக்குத்தாமே வட்டத்தை ஏற்படுத்திக் கொண்டனர் மேலும் வீட்டின் நான்கு சுவர்களுக்கு இடையில் முடங்கிக்கிடந்தனர், மேலும் சுருங்க உலகம் தெரியாதவர்களாக காணப்பட்டனர்.

அக்காலத்தில் காணப்பட்ட மூட நம்பிக்கைகள் அவர்களை கட்டுப்படுத்தி வைத்தது. கணவன் இறந்து விட்டால், இனி நானும் உடன் சேர்ந்து இறந்துபோதல், விதவைப் பெண்கள் தகாதவர்கள் என்று எண்ணி அவர்களை சமூகத்தில் இருந்து ஒதுக்கி வைத்தல், விசேட காலங்களில் சேர்த்துக்கொள்ளாமை, குறிப்பாக தீண்டாதவர்களாக காணப்பட்டனர். இவ்வாறான நிலைகளில் அவர்களின் மனநிலையும் தாம் அடிமை என்ற மனநிலையும் காணப்பட்டிருக்கும். மேலும் துன்பங்களை சந்திக்கவேண்டியும் ஏற்படலாம்.

இன்றை நவீன காலத்தை நேக்கும் போது ஆணுக்கு பெண் சமன் என்று கருதப்படக்கூடிய நிலை ஏற்படுகின்றது ஏனெனில் இன்றைய பெண்கள் விவசாயம், கல்வி, அரசியல், விஞ்ஞானம் என்ற வெவ்வேறு துறைகளிலும் முன்னேற்றமடைந்து காணப்படுகின்றர் ஒரு நாட்டை ஆட்சிசெய்யக்கூடிய அளவிற்கு வீரமும் தைரியமும் கொண்டவர்களாக இன்றைய பெண்கள் காணப்படுகின்றர். குறிப்பாக பாரதி கண்ட புதுமைப் பெண்கள் இப்போது தோற்றம் பெற்றுள்ளனர்.

இன்றைய ஒரு சில குடும்பங்களில் பெண்களே தலைவர்களாக காணப்படுகின்ற நிலையும் உண்டு. கணவன் பொறுப்பில்லாமல் காணப்படும் சந்தர்ப்பங்களிலேயே இவ்வாறு ஏற்பாட வாய்ப்புள்ளது. விதவைகள் மருமணம் முடிக்கின்றனர் தமக்கென ஒரு வாழ்க்கையை தீர்மாணித்துக் கொள்கின்றர். ஆய்வு கூடங்களில் பெண்களின் பங்களிப்பு கூடுதலாக காணப்படுகின்றது. வைத்திய தொழில்களிலும் பெண்களின் பங்களிப்பு அதிகமாகும். எனவே இன்றை நவீன காலத்தில் பெண்கள் சுதந்திரமாகவும் சகல உரிமைகளையும் பெற்றவர்களாக காணப்படுகின்றமை குறிப்பிடதக்க விடயமாகும்.



**பாலாஜி ரேவதி**
**தரம் - 12**
**கலைப்பிரிவு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹைக்கூ

உணர்வுகளின் ஒட்டு மொத்த
ஊடகம்
மொழி

¤ ¤

பலம் பலவீனம்
எடைப்போடும் தராசு
பரீட்சை

¤ ¤

காதுக்குள் தேனூற்றி
மயிலிறகால் வருடும் மருத்துவம்
இசை

¤ ¤

நிராகரிக்க முடியவில்லை
அங்கீகரிப்பவர் யாரும் இல்லை
மரணம்

¤ ¤

எரியப்பட்ட சில்லறைகள்
எட்ட முடியா தூரத்தில்
நட்சத்திரங்கள்

பறந்த விரிந்த பூமி
சிறகுகள் மடக்கிக் கொண்டது
பூகோளமயம்

¤ ¤

அலை அலையாய்
வெள்ளை அன்னங்கள்
வரிசையில் மாணவர்கள்

¤ ¤

பெண்
மௌனத்தில் – செடியில்
மொட்டுகள்

¤ ¤

உலக நியதிகளை கூட
உடைத்தெரியும் ஆயுதம்
பணம்

¤ ¤

தெரிவினில் உன்
ஊர்வலம் உறக்கத்தில் – நீ
சவம்

செல்வி பொன்னுசாமி திலகேஸ்வரி
ஆசிரியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை

அகில உலகெங்கும் அலையாய் வீசும்
தாயின் பாசம் அகிலமே அசந்த போகும்
வகையில் தாயின் நேசம்

தேயிலை தோட்டத்திற்கு
உன்னை உரமாக்கி
மல்லிகை தோட்டத்திற்கு
என்னை மலராக்கி
பார்த்தாயே
இதுதான் அன்னையின் பாசமா?

வான் மீது அழகாக எனக்கு துணையாக
வரும் என் கடவுளே!
கண்களுக்கு இமைபோல
எனக்கு உயிர் போல
நீ வந்தாயே என் தாயே!

உன் உயிரை எனக்கு தந்து
உன் குருதியை பாலாக தந்து
என்னை வளர்த்தவள் நீயே

உலகத்தை பார்க்க முடியாமல் உன்
கருவறையில்
இருந்த நான் இவ்வுலகை என்
கண்களில் பார்த்து ரசிக்கின்றேன் அது
உன்னாலேயே!

முத்தமும் ஒன்று சேர்ந்து
முப்பெரும் தேவியும் ஒன்றுக்கூடி
என்னத் தவம் செய்தாலும் கிடைக்காத
என் தாயை எனக்கு தந்தாயே
இதுவே எனக்கு கிடைத்த பெரிய தவமே.



கே. பரமேஸ்வரி
தரம் 10இ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களுக்கு தொழிற் கல்வியின் அவசியம்

☼ ☼ ☼



இன்றைய காலத்தில் பெண்களின் சமவுரிமை கவனத்தில் கொள்ளப்பட்டு பெண் உரிமை, பெண் விடுதலை, பெண்களின் கல்வி என்று பேசப்பட்டு வந்தாலும் தமிழர் வரலாற்றின் ஆரம்பத்திலேயே பெண்கள் உரிமை பெற்று இருந்ததாக இலக்கியங்கள் சான்று பகிர்கின்றன. ஆரம்ப காலத்தில் மட்டுமல்ல தொடர்ந்து வந்த காலகட்டத்திலும் பெண்கள் உரிமை பெற்றிருந்தார்கள், ஆனால் இடைப்பட்ட ஒரு காலகட்டத்திலேயே உரிமைகள் மறுக்கப்பட்டு அவர்களுக்கு பல்வேறு இன்னல்கள் உருவாயின. இந்நிலையில் தாம் பெற்று வந்த உரிமைகள் தொடர்ந்து கிடைக்க வேண்டும் என்பதை மையமாக கொண்டு இன்றைய பெண் நிலைவாதிகள் குரல் கொடுக்கின்றனர்.

அந்த வகையில் ஆண்களைப் போல பெண்களுக்கும் சகல துறைகளிலும் சம உரிமை அளிக்கப்பட்டு பெண் என்பவள் நான்கு சுவர்களுக்குள் அடைந்து கிடக்க பிறந்தவள் அல்ல, நாடளாவிய ரீதியில் தன் புகழை நிலைநாட்டப் பிறந்தவள் என்று ஆதாரத்துடன் பெண்நிலை வாதிகள் நிருபிக்கின்றனர். ஆகவே பெண் என்பவளுக்கு சமயலறை தொழில் என்பது ஏகபோக உரிமை ஆகிவிடாது அதை விட்டு வெளியேறி ஆற்றல் வாய்ந்த எந்தத் தொழிலாக இருந்தாலும் ஆணுக்கு நிகராக செய்யும் ஆற்றல் அவசியமாகிறது இதனையே பாரதியார்...

**சட்டங்கள் ஆள்வதும் பட்டங்கள் செய்வதும் - பாரினில்**
**பெண்கள் நிகழ்த்த வந்தோம்- எட்டும்**
**அறிவினில் ஆணுக்கிங்கே பெண் நிகர்...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற பாடல் வரிகளினூடாக குறிப் பிட்டுள்ளார். அதன் படி இன்றைய பெண்கள் அனைத்தும் கல்வி நெறிகளையும் கற்றிருக்க் வேண்டியது அவ்சியமாகிறது.

வாழ்க்கை என்னும் பெரிய கடலைக்கடந்து இல்லற வாழ்க்கை என்னும் கல்வியை அடைவதற்கு தொழிற்கல்வி அறிவு பெறாதவராயின் அவரது பிள்ளைகளுக்கு அவர் நற் கல்வியை அறிந்து வழிகாட்ட முடியாதவராகி விடுவார். அவர் தம் தலைமுறையும் பாதிப்புக்கு உள்ளாகிவிடும். பெண்கள் தொழிற்கல்வியை கற்று சிறப்புத் தேர்ச்சி அடைவதனால் அனைத்துத் துறையிலுமே முன் நிற்கக்கூடியவர்களாக இருக்கின்றார்கள். ஆகாயம் வரை சென்று அதையும் தாண்டி விண்வெளி வரை சென்று சாதனை புரிந்து வருகிறாள் பெண் கல்பனா சாவ்லா என்ற பெண் நாசா விண்வெளி ஆய்வு குழாமில் இணைந்து விண்வெளிக்கு சென்ற முதல் இந்திய பெண்மணி என்ற பெருமையை பெற்றுத்தந்தாள்; அதற்கு காரணமாக இருந்தது அவள் பெற்றுக் கொண்ட தொழிற்கல்வியே ஆகும்

எமது நாட்டை பொறுத்தளவில் அதிக பெண்கள் எல்லாத்துறையிலும் முன்னிலை வகிக்கின்றார்கள். அரசியல், பொருளாதாரம், சேவை துறையிலும் கூட முன்நிற்கின்றார்கள் இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம் அவள் கற்றிருக்கும் தொழிற்கல்வியின் பிரதிபளிப்பாகும் இனியும் நாம் தொழிநுட்ப கல்வியின் மகத்துவத்தை மறுக்க முடியாது, ஆயினும் தொழில் எனும் போது பெண்கள் சமூகத்தில் பல பிரச்சினைகளுக்கு முகம்கொடுப்பது மறுக்க முடியாது, என்றாலும் அவர்கள் தன்னம்பிக்கையுடனும் சுதந்திரத்துடனும் வாழ வேண்டுமாயின் அவர்களுக்கு கைகொடுப்பது தொழில் ஒன்றேயாம் அத் தொழிலும் சிறப்பானதாக அமைய தொழிற்கல்வி என்பது அவசியமே ஆகும்

**செல்வி. விநோதினி தர்மலிங்கம்**
(ஆசிரியை)
மமா/வ/ரிலாமுல்ல த.ம.வி
கந்தப்பளை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுமை பெண்ணே!
# புதியதோர் உலகம் படைப்போம்

"அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது.
அதனிலும் அரிது கூன், குருடு, செவிடு, பேடு
நீங்கி பிறத்தல் அரிது"

என்று ஔவையார் கூறியுள்ளார் அவ்வாறான மானிட பிறவி படைத்த பெண்கள் நாட்டின் கண்கள் ஆவார். பெண்கள் உண்மையானவர்கள், தூய்மையானவர்கள், மென்மையானவர்கள், அதனாலேயே என்னவோ பெண்கள் பூவுக்கும், அவர்களுடைய மனம் பாலுக்கும் ஒப்பிடப்படுகின்றது. ஒரு பெண்ணானவள் ஒரு தாயாகவும், மனைவியாகவும், வீட்டுத் தலைவியாகவும் இல்லரத்தை ஒழுங்காக நடத்திச் செல்பவளாகவும் இருக்கின்றால் ஒரு குடும்பத்தில் இன்ப துன்பங்களில் பெண்களின் பங்களிப்பே பெரும்பங்காக இருக்கின்றது. அது மட்டுமன்றி அலுவலகங்களில் உயர்பதவிகளில் இருக்கும் பெண்கள் வீடுகளிலும் தனது கடமைகளை சரியாக முடித்து தொழில் ரீதியிலும்.இல்லர வாழ்விலும் வெற்றிக்கண்ட எத்தனையோ பெண்கள் அடுப்பு ஊதுவதற்கென்றே ஒதுக்கி வைக்கப்பட்டு இருந்தனர். ஆணாதிக்கம் தலைதூக்கியிருந்த காலகட்டம் அது. பெண்கள் அடிமைகள் போல் நடத்தப்பட்டார்கள், படிப்படியாக முன்னேறிய பெண் சமூகத்தில் இன்று மேல் நாட்டு பெண்கள் ஆண்களுக்கு நிகராக விண்வெளி ஆராய்ச்சிகளில் ஈடுபடுகின்றனர். விஞ்ஞான கண்டு பிடிப்புகளிலும் ஈடுபடுகின்றனர், ஏன் நம் நாட்டில் கூட பெண்கள் கணினி சேவை அரசியல், வைத்திய, கலாசார, சட்டம், சமூக துறைகளில் பெரும்பாலான பெண்கள் முன்னேறிக் கொண்டு வருகின்றனர் நாளுக்கு நாள் பெண்களின் வளர்ச்சி வீதம் மின்சார பாச்சலை விட வேகமாக அதிகரித்துக் கொண்டே போகின்றது. கல்வி துறையை எடுத்துக் கொண்டால் பெண்களே அதிகமாக காணப்படுகின்றனர்.

இவ்வாறாக பெருமை பேசப்படும் பெண்கள் வேலைக்குப் போகும் போதும், அலுவலகங்களில் சக ஊழியர்களினாலும். உயர் அதிகாரிகளினாலும் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகின்றனர். இத்தனை துறைகளிலும் சிறந்து விளங்கும் பெண்களே பெரும்பாலும் ஆண்களினால் நிலை தடுமாறி விடுகின்றனர். பாடசாலைக்கு போகும் பிள்ளைகள் நல்ல மரத்தில் ஒரு புல்லுருவி இருப்பது போல நல்ல சமுதாயத்தில் சில ஆசிரியர்களினால் பாதிக்கப்படுகின்றனர் காவலாக இருக்க வேண்டிய வேலியே பயிரை மேய்வது போலாகின்றது. இளம் பெண்கள் பருவ கோளாறுகளால் நாகரீகம் என்ற பெயரில் தங்கள் வாழ்வை தாமே பாழாக்கி கொள்கின்றனர்.வீட்டு வேலைகளுக்கு அமர்த்தப்படும் சிறுமிகள் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றனர். அது மட்டுமா வீட்டு வேலைகளுக்கு செல்லும் யுவதிகள் தவறான முறைகளில் ஈடுபடுத்தப்பட்டு அவர்களில் கனவுகள் தவிடு பொடியாக்கப்பட்டு விபச்சாரத்துக்கு பலாத்காரமாக ஈடுபடுத்தப்படுகின்றனர் தினமும் பத்திரிக்கை, செய்திகள் மூலமாக எமது காதுகளுக்கு எட்டுவது இது போன்ற விடயங்களே நம் கண்கூடாக எத்தனையோ விடயங்களை இது பற்றி அறிகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கெல்லாம் காரணம் தான் என்ன. பாலியல் பற்றிய அறிவு எம்மிடையே போதுமான அளவு இல்லாமை. பெண்களை இலகுவாக ஏமாற்றி விடலாம் என்ற ஆண்களின் முன்போக்கான என்னம் முற்கால கவிஞர்கள் முதல் இன்றைய கவிஞர்கள் வரை பெண்களை வர்ணித்து பாடல்கள் எழுதுவதாலோ என்னவோ சில ஆண்கள் பெண்களை போகப் பொருளாக பார்க்கின்றமை, திரைப்படங்களில் பெண்களை கவர்ச்சியாக காட்டுகின்றமை என எத்தனையோ காரணங்களை கூறலாம்.

இதனை எவ்வாறு தீர்ப்பது. பாலியல் தொடர்பான அறிவை பெண்களுக்க புகட்டுதல், வேண்டும் தாய்மார்களே. பெண்பிள்ளைகளின். நடத்தையில் கவனம் செலுத்துவது உங்களுடைய தலையாய கடமை. அது மட்டுமின்றி அவர்களக்கு பாலியல் பற்றிய அறிவை சிறு வயதிலேயே கற்றுக்கொடுங்கள்- சிறுமிகளை வேலைக்கு அமர்த்துவதை தவிர்த்து வருவாய் கிடைக்கக் கூடிய கைத்தொழில்களை செய்து அவர்களுக்கு கல்வியறிவை புகட்டுங்கள். இளம் பெண்கள் வீட்டு வேலைகளுக்கு போவதை தவிர்த்து வேறு தொழில்களுக்கு செல்லுங்கள் இன்று ஆண்களுக்கு சமனான உரிமை பெண்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது என்று பேச்சலவில் பேசப்படுகின்றதே தவிர சம உரிமை எமக்கு கிடைத்ததாக தெரியவில்லை. அதனை பெற்றுக் கொள்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ளலாம் இளம் பெண்கள் மேல் நாட்டு பெண்கள் போல் வாழ எண்ணாமல் நமக்கென்று ஒரு தடைமுறையை விதித்து கட்டுக்கோப்பான வாழ்வை வாழ வேண்டும். ஆண்களுக்கும் எமக்கும் இடையில் ஒரு இடைவெளியை உருவாக்கிக் கொள்ளலாம்.

அது மட்டுமல்ல பாதிக்கப்பட்ட பெண்களை அவர்களை ஒதுக்கிவைக்காமல் எங்களால் இயன்றளவு உதவி செய்வோம் அவர்களுக்கு வாழ்க்கையில் விழிப்புணர்வை ஏற்படுத்தி சமுதாயத்தில் அவர்களுக்கு ஒரு நல்ல நிலையினை ஏற்படுத்திக் கொடுப்போம்.இதற்காக நாடெங்கும் மகளிர் காவல் நிலையங்கள் அமைக்கப்பட வேண்டும். மகளிர் சங்கங்கள் அமைக்கப்பட வேண்டும். இதன் மூலம் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உதவுவோம். இன்று சட்டம் படித்த எத்தனையோ பெண்கள் இருக்கின்றார்கள் ஏமாற்றிய உங்களக்கு தக்க தண்டணை வாங்கி கொடுக்க வேண்டும்,பெண்ணே பயப்படாதே ஏராளமான வீரத்தாய்கள் வாழ்ந்ததும் இம் மண்ணில் தான் தனது கோபத்தால் மதுரையை எரித்த கண்ணகியும், யமனிடமிருந்து கணவனை மீட்ட சாவித்திரியும் வாழ்ந்த இப்பாரினில் வந்த பரம்பரையில் பிறந்த பெண்கள் நாம் ஏன் அச்சபட வேண்டும். மகளீர் ஒன்றினைந்து தவறுகள் எங்கு நடக்கிறதோ தண்டிப்போம் என்ற உறுதியும், ஒற்றுமையும் இருந்தால் சாதிக்க முடியாது எதுவுமே இல்லை.

**பொறுமை வாய்ந்த புதுமை பெண்ணே!**
**பூகம்பம் போல் பொங்கி எழு**

**புதியதோர் உலகம் படைப்போம் வாரீர்.**

**ம. சண்முக மாலினி**
ஆசிரியை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மகளிர் தின சிறப்பிதழ் என்றும் சிறப்புற நல்வாழ்த்துக்கள்*

# SHAN VIDEO

சான் வீடியோ ශාන් වීඩියෝ



**No. 16, Kurundu Oya,**
**Kandapola**

மகளிர் தின நல்வாழ்த்துக்கள்



රාජා ස්ටෝර්ස්

# RAJA STORES

ராஜா ஸ்டோர்ஸ்

**No. 3, Highforest Bazaar**
**Kandapola**
**052 5670236**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியத்தகு சாதனைகள்



பெண்ணின் விடுதலைக்குப் பெருங்குரல்
எழுப்பிய பிறவிக்கவி பாரதியே - நீ
போற்றிப் புகழ்ந்த தாய்க்குல மின்று- வெறும்
சேற்றில் கிடந்துழலும் சிறுநிலை
வேற்று மனிதர் பலர் வீட்டிற் புகுந்து - அவர்
வீறிட்டலறிடவே வேட்கை தீர்த்திடும் இழிநிலை
காற்றில் பறக்கும் கற்புநெறி
சோற்றுக்கில்லாதோர் பிறர்சுகம் காண
விரித்துவிட்ட பாய்படுக்கை
மாற்றி ஏழுத முடியாத சீதனத் தலையெழுத்து
வேலைக்கு மனுச்செய்யும் மகளிர்பால்
விரைத்தூறும் விரசத்தின் உமிழ்நீர்கள்
இரவில் உறிஞ்சி பகலில் துப்பப்படும் தாம்பத்தியம்
கனவில் தோன்றும் காதலரின் கைவரிசையில்
வீசி எறியப்படும் வீதி சிசுக்கள்
வேதனைமிக்க இச்செயல்கள் எல்லாம்
விடிந்த உன் நூற்றாண்டில்
வியத்தகு சாதனைகள்...

**ஆசிரியை செல்வி. கண்ணையா ஜோய்பிரபா**
நு/வ/ரிலாமுல்ல த.ம.வி, கந்தப்பளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகளிர் தின சிறப்பிதழ் என்றும் சிறப்புற நல்வாழ்த்துக்கள்

## INFORMATIC'S COMPUTER INSTITUTE

*Computer sales and Computer Studies*

Assemble & Branded Computers, Laptops, Mobile Phonesall kind of Computers related accessories, Blank Cd's, DVD's Programme Installation, Computer Repairing, Maintenance, Networking, Wireless, Burlar alarm System and CCTV, Monitoring Systems, Internet connections


## INTERNETCAFE

No 3, Highforest Bazaar, Binganthalawa Road, Kandapola
052 5674588, 052 5716566, Hotline: 071 5840928

மகளிர் தின நல்வாழ்த்துக்கள்

# G. T. S. TRADERS

**தமிழ்செல்வன்**



**No. 3, Highforest Bazaar, Kandapola**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணே!



பொறுத்தது போதும் பொங்கி
எழுந்திடு
புறப்படு பெண்ணே
அடுப்படியிலும் ஆற்றங்கரையிலும்
அமர்ந்த காலம் போதும்
புறப்படு பெண்ணே!

கொல்லும் வெயிலிலும்
கொட்டும் மழையிலும்
கொடூர அட்டைகடியிலும்
குருதி சிந்த உழைத்தது போதும்
புறப்படு பெண்ணே!

தரணியிலே பெருமை வேண்டும்
தலை தூக்கி வாழ வேண்டும்
அடிமை சங்கிலியை அறுத்தெறிந்து
புறப்படு பெண்ணே !

பெண் விடுதலை வேண்டும்
பெண்ணியத்தின் பெருமை வேண்டும்
பெண்ணியத்தின் பெருமை பேற்றிட
புறப்படு பெண்ணே
காரிருள் சூழ்ந்த
கடும் பாரினிலே
கலங்காத நெஞ்சத்துடன்
வீர மங்கை என
வெற்றி நடை போட்டிட
புறப்படு பெண்ணே!
சின்னத் திரையும் சினிமாவும்
சின்னாப் பின்னாப் படுத்தும்
சிந்தனை செயல்களை
சீற்றத்துடன் தகர்த்தெறிய
புறப்படு பெண்ணே!

பாமர மக்கள் முதல்
பள்ளி சரார் வரை
குலம் தாழ்த்தும் கெடுர செயல்களை
கிள்ளி எறிந்திடு
கிளர்ந்தெழு பெண்ணே!

தகாத செயல்களை
தகர்தெறிந்திட
மதி கெட்ட செயல்களை
மண்ணில் புதைத்திட
மாதர் தம்மை உயர்த்திட
மாண்புடன் புறப்படு பெண்ணே!

**திரு.சு. கமல்ராஜ் (ஆசிரியர்)**
**நு/வ/ரிலாமுல்ல த.ம.வி**
**கந்தப்பளை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணே!

மார்ச் எட்டு
பாராட்டு
மகளீர்க்கு மட்டும்

பெண்களை
தெய்வம்
தேவதை
தாய்
என பாராட்டுகின்றோம்

இவை ஃ போல்
ஆய்த எழுத்தாய்
எப்போது மாறுகின்றதோ
அப்போதுதான்
அவள் பெண்!

சமவுரிமை கிடைத்தாலும்
நீ
சில இடங்களில் குறிகளாகவும்
நீ
வேறு சில இடங்களில்
நெடிகளாகவும்
ஒலிக்கத்தான் வேண்டும்

பெருமைப் பேசப்பட
வேண்டிய பெண் - இன்று
பேரம் பேசப்படுவதேன்?

எனக்குள் நீங்கள் என்றாலும்
உங்களுக்குள் நான்
இல்லையே என்பது
கண்ணாடியின் ஆதங்கம்

இதுபோல்
எங்களுக்கென்று ஒரு
கலாச்சாரம் இருந்தாலும் - அது
உங்களுக்குள் இல்லை - ஏன்?

மாற்றம் வேண்டும்
பெண்ணில் தான்
பெண்மையில் இல்லை
பெண்ணே

எனது மனம் வீசும்
வாழ்த்துக்களை
மலர் மாலையாக
அணிவிக்கின்றேன் - இந்த
மகளிர் தினத்திற்

**ரா. ரமனேந்திரன்**
ஆசிரியர்
மமா/வ/ரிலாமுல்ல த. மா. வி
கந்தப்பளை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உனக்காகத்தான் இந்த உலகம்

பெண்ணே
இந்த உலகத்துக்காக
நீ இல்லை
உனக்காகத்தான்
இந்த உலகம்

உன் கற்பனை
உணர்வு
எண்ணம்
சிந்தனை
சிறந்திட உருவான
படைப்பே பெண்

அடுப்படியில் அடைக்கப்பட்ட
அந்தகாலம் எப்போதோ
மாறிவிட்டது
இன்னும் ஏன்
தடுமாற்றம்
உன் சாதனைக்கு.....

போருக்கு சென்று
சண்டையிடாதே
பேனா முனையில்
சண்டையிடு
சட்டம் உனக்கு
சாதகமாகும்

அதிகார வர்க்கத்துக்குள்
நீயும்
அடங்கி விடாதே
உன்
சிந்தனைகளை
சிறகாக்கிவிடு

சிலருக்காவது புரியும்
படைப்பின் வலிமை
பயம் என்ற போர்வையில்
கலைத்திடு
ஒழிந்துகிடக்கும்
எண்ணக்கிடக்கைகளை
சாதனையாக்கு
உன் சாதனைகள்
என்றென்றும்
உலகம் உள்ளவரை
பேசும்

நிலவை பிடிப்பது
நிச்சயமில்லை
என்றாலும்
பெண்ணே- என்
பெயர் வானில் சிறகடிக்கும்
போது
நீரும் நெருப்பும்
காற்றும் கூட
ஒரு நாள்
உன்னை போற்றும்

உன்
எதிர்காலத்தை
நீ
முடிவெடுத்தால்?
உனக்காகத்தான்
இந்த உலகம்

**செல்வி. ச.தேவிகா**
(ஆசிரியை)
மமா/வ/ரிலாமுல்ல த.ம.வி
கந்தப்பளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகளிர் தின நல்வாழ்த்துக்கள்



**S. JAYAKANTHAN & S. JAYASEELAN J.P**

Highforest No-03, Kandapola

# LIYORK

**COMMUTICATION & TAYLORS**



**LIYORK COMM**

No 72/B, Lakmali Building

Halgranoya

052 2265646

# SHARMILA

**COMMUNICATION & RINTERS**

**Local & IDD calls,**

**Fax & Photo Copy Service**

**Computer Type Setting,**

**Internet & Email**

**Stationeries, Applications**

**& Affidavits**

**Greeting Cards, CD Wri ting**

No-53/6, Temple Building

Police Road, Ragala Bazaar

Halgranoya

052 5696999

sarmilacomm@yahoo.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுரை



மலைகளின் நடுவே கம்பீரமாய் வீற்றிருக்கும் நு/வ/ரிலாமுல்ல தமிழ் மகா வித்தியாலயத்தின் 2010 ஆம் ஆண்டு மகளிர் ஒன்றியத்தின் பெண்களை முன்னிலைப்படுத்தும் அமைப்பு உடையதாகவும் வரலாற்று ஆவணமாக வெளிவருகின்ற "காரிகை" எனும் இச்சஞ்சிகை வற்றாத ஜீவ நதியாக ஆண்டுதோறும் வெளிவர இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

பெண்களின் சமூக விழிப்புணர்விற்கும், வெற்றிகளுக்கும் வழிகோலும் வகையிலும், எண்ணக்கிடக்கைகளை தூண்டும் வகையிலும் இச்சஞ்சிகை அமைவதையிட்டு பெருமையடைகின்றேன்.

காரிகையில் சங்கமித்து ஆக்கபூர்வமான ஒத்துழைப்பையும் ஆசிகளையும் வழங்கிய எமது அதிபர், உப அதிபர், பிரதியதிபர், ஆசிரிய நண்பர்கள், மாணவமணிகளுக்கும், புதிய பரிணாம எழுச்சிக்காய் வித்திட்ட படைப்பாளிகளுக்கும், இச்சஞ்சிகையை மெருகூட்ட விளம்பரங்களை தந்துதவிய விளம்பரதாரர்களுக்கும், வண்ணங்கள் பலசேர்த்து, எழுத்துக்களை கோர்த்து கைக்குள் அடக்கி வாசிக்க வடிவமைத்த அம்ருதா அச்சகத்திற்கும், எனது இதயங்கனிந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

நன்றி

**மகளிர் ஒன்றிய செயலாளர்**
**திருமதி மணிமேகலை லோகேஸ்வரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்களுக்கு !

இலகு தவனை கொடுப்பனவில்

கணனிகள் வழங்கப்படும்

**077 5882774, 071 2225621**

We Offer

**COMPUTERS**

in Easy Instalment Plan for Teachers

**SALES**

Brand New & Used Computers

PCs' & Laptops Computers Accessories

Softwares CDs'

**SERVICES**

Repairing, Software Instalation

Trubleshooting

Mit

Maharaaj

*information technology*

**MIT COMPUTERS**

No: 26/1, Udapussalawa Road, Ragala Bazaar, Halgranoya,

email: mitmahraaj@sltnet.lk





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகளிர் தின நல்வாழ்த்துக்கள்

# கவிதா நகையகம்


කවිතා ජුවලරි

**Kavitha Jewelery**




**No-81, Ragala Bazaar,**
**Halgranoya**
**052 2265504**

மகளிர் தின நல்வாழ்த்துக்கள்



# SINGER *Plus*

அனைத்துவிதமான பொருட்களையும்
எமது நிறுவனத்தில் இலகு தவணை
முறையில் பெற்றுக்கொள்ளலாம்.






## SINGER SHOWROOM

Police Road, Ragala
Halgranoya

Phone: 052 5673329, 077 5410545


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org